காஞ்சி

ஆசிரியர்
அண்ணாதுரை

27-3-66

20
காசு



வியட்நாம் விடுதலை வீரர்
ஹோசிமின்

NEAT EXECUTION!

PROMPT DELIVERY!

!



MAIN GATE

Phone: 51273

C/o Phone: 51899

Regd. No. 1681

SSI/PR/504/093/04

GEMINI
IRON WORKS

Manufacturers of:

Trusses, Rolling shutters, Iron Main gates, Collapsible gates, Fancy Grills, Water Tanks & Iron furniture Etc.



COLLAPSIBLE GATE

Proprietor:

M. ELUMALAI,

No. 8A, Maniganda Mudali 3rd Lane,

Washermanpet,

MADRAS-21.

காஞ்சி

மலர் 2 27—3—66 இதழ் 35

"கடப்பாரையை விழுங்கிவிட்டு...!"

அன்பில் தருமலிங்கமும், அரங்கண்ணலும், மாதவனும், முல்லை வடிவேலும், சிராமுலுவும் மற்றும் பலரும் சென்னை சட்ட மன்றத்தில் கூட்டுறவுத் துறையிலே புகுந்துகொண்டுள்ள குறைபாடுகளையும் முறைகேடுகளையும் எடுத்துக் காட்டியது கேட்டு வருத்தம் மேலிட்டுத் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், இப்படி எல்லாம் குறைகளை எடுத்துக் காட்டி, ஒரு நல்ல துறையை—கூட்டுறவுத் துறையை—பாழாகும்படிச் செய்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார் — உருக்கமாகத்தான் இருக்கிறது அவருடைய பேச்சு.

அன்று எடுத்துக் கூறப்பட்ட தகவல்களைக் கேட்டு, அவருக்கும் அவர் போன்றாருக்கும் கோபம் கொப்பளித்துக்கொண்டு வருவதைக் காட்டிலும் வருத்தம் பீறிட்டுக்கொண்டு வந்திருக்கிறது. அதற்குக் காரணம், மறுக்க முடியாததைத்தானே கூறுகிறார்கள் என்ற மெய்யுணர்வுதான் என்று கருதுகிறோம்.

அந்தத் துறைக்கு அமைச்சராக உள்ளவர்கூட, அவர்கள் எடுத்துக் காட்டிய ஊழல்கள், முறைகேடுகள் ஆகியவற்றை ஒரே அடியாக மறுக்கவில்லை; அவர் மெத்தவும் துணிவுடன் தருவித்துக்கொண்ட சமாதானமெல்லாம், விரிந்து பரந்து கிடக்கும் கூட்டுறவு அமைப்புகளில்—மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ள இடங்களிலேதான் குற்றம் குறைகள் இருக்கின்றன என்பதுதான்.

அடியோடு கெட்டுவிடவில்லை என்று கூறிக்கொள்வதிலே அமைச்சர் அகமகிழ்ச்சியும் பெருமையும் கொள்ள விரும்புகிறாரா என்று தெரியவில்லை. அவர் கூறுவதுபோல அந்தத் துறையிலே உள்ள குறைகளும், 'ஏதோ சில அல்ல'! ஏதோ சிலவற்றைத்தான் நமது உறுப்பினர்களால் எடுத்துக் காட்ட முடிந்தது; எல்லாவற்றையும் அல்ல, இந்த 'ஏதோ சிலவும்' எப்படியோ நேரிட்டு விட்டவைகள் அல்ல; அந்தத் துறையைப் பிடித்துக்கொண்டுள்ள நோயின் குறிகள்!

கூட்டுறவுத துறையின் மேம்பாடு பற்றியும், எளியோருக்கு அந்தத் துறையின் மூலம் கிடைத்திடக் கூடிய நலன்கள் பற்றியும், விரிவுரை தேவையில்லை; நிரமப நடத்தியுள்ளனர்.

ஆனால் நடைமுறையிலே, இன்று கூட்டுறவுத் துறை என்பது 'பெரிய புள்ளிகளின்' பாசறையாகவும் அரசியல் ஆதாயம் பெறுவதற்கான வாய்ப்பினைப் பெற்றிடும் இடமாகவும் இருப்பதனை மக்கள் நன்றாகக் காண்கின்றனர்; கசப்புணர்ச்சி வளர்ந்தபடி இருக்கிறது.

கூட்டுறவு பாங்கிகளின் தலைவர் நிலை பெறுவதை சட்ட மன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் நிலையை விடச் சுவையும் பயனும் உள்ளதாகக் கருதுகின்றனர் என்பது அதற்கான தேர்தல்களின்போது காணப்படும் பரபரப்பும் மேற்கொள்ளப்படும் முறைகளும், நன்கு விளக்குகின்றன.

ஏழ்மையும் அறியாமையும் மிகுந்துள்ள நாட்டில் 'கடன் கொடுப்பவர்' முன் கைகட்டி வாய்பொத்தி நின்றிடவும், அவர் ஆவலை அறிந்து நடந்திடவும், ஏவல் கேட்டு செயல்படவும் பலர் முன்வருவதிலே வியப்பொன்றுமில்லை.

கடன் கொடுப்பவர் தருவது தமது 'இருப்பை' அல்ல என்று மக்கள் உணர்ந்திருப்பினும் 'கொடுக்கும் கரத்தை' அலட்சியப்படுத்தினால், பிறகு கால்கடுக்க நடந்தாகவேண்டும், வாய்வலிக்க பஜித்தாகவேண்டும், கண்கலங்க நின்றாகவேண்டும் என்பதனையும் கவனித்துத் தீரவேண்டி இருக்கிறது.

இந்த நிலையினை 'ஓட்டு வேட்டை'யை நடத்திடப் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்பது உலகறிந்த இரகசியம்.

கட்சிக் கண்ணோட்டம் கூடாது! அரசியலே தலை காட்டக்கூடாது! பொதுநல நோக்கமின்றி பிறிதோர் நோக்கம் எழலாகாது!-என்ற நல்லுரைகள் உள்ளன! அறிவோம்; அவை நல்லுரைகளாகவே உள்ளன! நடைமுறையோ முற்றிலும் வேறு!!

இந்த வட்டத்தில் எண்பது ஆயிரம் கொடுத்திருக்கிறோம், ஆகவே அங்கு உள்ள வாக்குகள் நம்மை விட்டு வேறு எங்கே போகும்?

எட்டு நடை நடந்துவிட்டார், இரண்டு இலட்சம் வேண்டுமாம்; கொடுக்கத்தான் போகிறேன், ஆளை மடக்கத்தான் போகிறேன்!

இந்த விதமாக அந்த அமைப்புகளிலே அரசோச்சுபவர்கள் பேசிக்கொள்கின்றனர்; அனைவரும் அறிவர்.

'எங்கோ சிற்சில இடங்களில்' என்கிறார் அமைச்சர்! எல்லா இடங்களுமே கட்சிக் கிளைகளாகவே செயல் படுகின்றன என்பதனை, ஆங்கு உள்ள அமைப்புகளில் இடம் பெற்றிருப்போரின் பட்டியலே காட்டும்.

அமைச்சர் துணிந்து கூறுகிறார்—அமைச்சரான பிறகு துணிவு ஏற்படாமலிருக்க முடியுமா — அந்த அமைப்புகளிலே ஆளுங்கட்சியினரே அதிகமாக இருப்பதற்குக் காரணம், அவர்களே நேர்மையாளர்கள், நாணயவான்கள் என்பதால்தான் என்கிறார்.

ஆளுங் கட்சியில் உள்ள நேர்மையும் நாணயமும் அடிக்கடி பாராளுமன்றத்திலே மட்டுமல்ல வழக்கு மன்றங்களிலே கூட, பளிச்சிட்டுக் கொண்டிருக்கக் காண்கிறோம்.

எத்தனை நேர்மையை விளக்கிக் கொண்டிருந்தார் கெய்ரோன்! ஆளுங்கட்சியின் அரிமா!!

ஆளுங் கட்சியில் உள்ளவர்கள் தவறான போக்கை மேற்கொள்ளும்போது, ஊழலைத் துணிந்து நடத்திடும்போது, கண்டறிந்திட, அம்பலப்படுத்திட, கண்டித்திட பலர் முன்வரத் தயங்குவார்கள் - பெரிய இடத்துப் பகை நமக்கேன் என்பதால்!

பொதுநலம் காத்திடும் கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு ஒருசிலர், ஊழல்களை வெளியே எடுத்துக் காட்டினால், பகை கக்குவதுடன் பழி தீர்த்துக்கொள்ளும் போக்கிலே நடந்துகொள்வதற்கும் பெரிய புள்ளிகள் தயங்குவதில்லை.

பணத்தாலோ பதவியினாலோ செல்வாக்குப்பெற்று விடுபவர்கள் எதைக் கூறினாலும், எவ்வளவு பொரு

ஊற்ற பேச்சினைப் பேசினாலும், பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல, போற்றிப் புகழ்வதேகூட, எளியோரின் நிலைமை ஆகிவிடுவது காண்கிறோம்.

என்னய்யா ஆந்தைபோல விழிக்கிறாய்? என்று கேட்பார் பெரிய புள்ளி, எளியோனைப் பார்த்து; அவன் காண்கிறான் பெரிய புள்ளியின் கண்கள் கொவ்வையெனச் சிவந்து கிடப்பதை—குடிவெறியால்.

என் கண்ணிலே ஒரு குறையும் இல்லை கனவானே! உமது கண்கள்தான் காணச் சகிக்கவில்லை என்று ஏழையால் கூற முடிகிறதா! கூறிடின் என்ன கதி நேரிடுமோ என்றல்லவா கலக்கமடைவான்.

பதவியில் இடம் பிடித்துக் கொண்டதாலேயே, எந்தத் துறை பற்றியும் எப்படியும் பேசலாம், எவரையும் என்ன தெரியும் உனக்கு என்று ஏசலாம் என்றாகி விட்டது.

இந்நிலையில், அந்தப் பெரிய புள்ளிகள் நடத்திடும் புரட்டுகளைக் கண்டறிந்து கூறிட எத்தனை பேர்களுக்குத் துணிவு பிறந்திட முடியும்? அதனால்தான் 'ஏதோ சில ஊழல்களை' மட்டுமே வெளியே பேசிடுகிறார்கள், அச்சமற்ற நிலை இருந்திடின் அடுக்கடுக்காகக் கிளம்பிடும் பெரிய புள்ளிகள் செய்திடும் புரட்டுகள்!

'ஏதோ சில' மட்டுமே எடுத்துக்காட்ட முடிந்திருக்கிறது என்று அமைச்சர் கூறியதிலிருந்து, அலட்சியப்படுத்தத்தக்க சில தகவல்கள் மட்டுமே கூறப்பட்டன என்று எண்ணி அமைச்சர் அகமகிழ்கிறார் போலும்.

ஆனால் அலட்சியப்படுத்தத்தக்கது என்று 'பாவனை'தான் காட்டப்படுகிறதே தவிர, குட்டுகள் வெளிப்படும் காலம் வந்துவிட்டதே! பாவிகள் புட்டுப் புட்டுக் காட்டத் துணிந்து விட்டனரே!! என்ற குலை நடுக்கம் ஆள்வோருக்குப் பிறவாமலில்லை.

அந்த நடுக்கம் காரணமாகவே, குற்றச் சாட்டுகளுக்கு மறுப்பு அளித்திடும் 'கனம்கள்' தடுமாறுகிறார்கள், திகைக்கிறார்கள்; எடுத்துக் காட்டப்பட்டவைகளை அடியோடு மறுத்திட இயலாமல் திணறுகிறார்கள்.

கருணாநிதியின் கண்டனம், மதியழகனின் குற்றச் சாட்டுகள்; ஆகியவைகளுக் கெல்லாம் அமைச்சர் தந்திடும் பதில்;

அரைத்த மாவையே அரைக்கிறார்கள்.
பழைய கதைகளையே பேசுகிறார்கள்.

என்பனபோன்ற சுவையற்ற, சூடற்ற, பொருளற்ற, பொருத்தமற்ற போக்கிலேயே அமைந்திடக் காண்கிறோம்.

இவ்வளவுதானே! இதுதானே! இது ஒரு பெரிய குற்றமா! இது ஒரு அருமையான கண்டுபிடிப்பா! என்றெல்லாம் ஆளுங் கட்சியினர் பேசிடக்கூடும். ஆனால் பொதுமக்கள்?

அன்பில் தருமலிங்கம் எடுத்துக் காட்டிய 'முறைகேடுகள்', பணத்தின் அளவை மட்டும் கணக்கிட்டுப் பார்த்தால், 'அற்பமானவை'!

ஆனால் பொதுமக்கள் என்ன எண்ணுவார்கள்? அமைச்சர்களைப் போல, இந்த அற்பத் தொகை பற்றிய குற்றம்தானா காட்ட முடிந்தது? என்றா கேட்பர்.

இந்த 'அற்பத் தொகை' சம்பந்தமாகவே, அழுக்கு ஏற்பட்டு விட்டிருக்கிறதே! பெரிய ஆசாமிகள் பெயருடன் மிகச் சிறிய தொகை இணைக்கப்பட்டு எடுத்துக் காட்டப்படுகிறதே! ஏன் இந்த 'அற்பத் தொகை' விஷயமாக, இந்த முறைகேடு நடந்தது? எப்படி நேரிட்டது? ஏன் இவ்விதமான நிலைமை ஏற்பட இந்தப் பெரியவர்கள் இடமளித்தார்கள்? என்றல்லவா எண்ணுவர்; எரிச்சல் கொள்வர்.

கோடி கோடியாக, இலட்ச இலட்சமாக உள்ள தொகையிலே ஊழல் இருந்தால்தான் ஊழல் என்று பெயரா? இல்லையே! அளவு அல்ல, கவனிக்கப்பட வேண்டியது; முறை!

"கேட்டீர்களா சேதியை" என்று துவக்கி, சிற்றூர்களில் உள்ளவர்களும், ஆற்றோரத்தில் அங்காடிப் புறத்தில், அலுவலகத்தில் தொழிலிடத்தில், அன்பில் தருமலிங்கம் எடுத்துக் காட்டிய 'கணக்குகள்' பற்றி, கண் சிமிட்டியபடி, கேலிப் புன்னகை செய்தபடி அல்லவா பேசுவார்கள். தொகை மிக மிகச் சிறிது எனப்பதால், பலமாகக் கண்டிக்கத்தக்கதல்ல என்று விட்டு விடுவார்கள்.

தொகை பெரிதாக இருந்திடின், பயத்துடன் கண்டிப்பர்; பதறிய நிலையில் கண்டிப்பர்!

தொகை சிறிதாக இருந்திடக் காணும்போது, ஏளனத்துடன் இணைந்து கிளம்பும் கண்டனம்!

நமது தோழர்கள் இத்தகைய முறைகேடுகள் குறித்து, சட்டமன்றத்திலே எடுத்துப் பேசுவதுடன் நின்றுவிடுபவர்கள் அல்ல! பொதுமக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கிறார்கள் இந்தத் தகவல்களை; ஒவ்வொரு நாளும்! காங்கிரசாட்சியினருக்குக் கடும்கோபம் மூண்டிடுவது இதனால்தான்.

அந்தக் கோபம் காரணமாகவே, எப்படியும் கழகத்தைத் தேர்தலில் தீர்த்துக்கட்டிவிட வேண்டும் என்று துடித்துக் கிளம்புகிறார்கள்; துந்துபி முழக்குகிறார்கள்.

ஆனால் அதேபோது பொதுமக்கள், நம்சார்பில் வாதாட, நிர்வாகத்திலே நெளியும் ஊழல்களை அம்பலப்படுத்திட, கண்டித்திட, இந்தக் கழகமல்லவா துணிந்து முன்வந்திருக்கிறது என்று எண்ணி மகிழ்வதுடன், இத்தகைய கழகத்தை மேலும் வலிவுடையதாக்கிட வேண்டும் என்று முனைந்து நிற்கின்றனர்.

பொதுமக்கள் கொண்டுள்ள இந்தப் போக்கு கண்டுதான் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ஆலாய்ப் பறக்கிறார், "அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்! அதுகளை நம்பாதீர்கள், நம்பாதீர்கள்! என்று பேசியபடி இருக்கிறார்.

மற்றத் தலைவர்கள்போல அல்ல எமது மாபெருந் தலைவர்; அவர் அதிகமாகப் பேசிக் காலத்தை வீணாக்க மாட்டார் என்று ஆலவட்டங்கள் முன்பு பேசிவந்தனர் காமராஜர் பற்றி. இப்போது?

மற்ற எந்தத் தலைவர் பேசினாலும் பயன் இல்லை; மற்ற எவருக்கும் விளக்கம் அளித்திடத் தெரியவில்லை; வாதாட முடியவில்லை என்று எண்ணி, காமராஜர் பேசுகிறார் பேசுகிறார், பேசியபடியே இருக்கிறார்.

அவர் செயல் வீரர்! என்றனர் முன்பு! இன்று? பொழிகிறார், பொறிந்து தள்ளுகிறார் என்கிறார்கள்.

அவருடைய போக்கையே மாற்றி அமைத்த பெருமை நமது கழகத்தவருக்குக் கிடைத்திருக்கிறது.

நாமே முன்பு சிறிதளவு பயந்தோம், அவர் 'ஏகப்பட்ட' பெரியவராகிவிட்டாராமே, ஏழெட்டு நாட்டுத் தலைவர்கள் ஒருவரை ஒருவர் இடித்துத் தள்ளிக் கொண்டு அவர்முன் வந்து நின்று, இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைத்திடும் ஐயனே! இந்தச் சிக்கல் போக வழிகாட்டும் தலைவனே! என்றெல்லாம் வேண்டி நிற்கிறார்களாமே, இந்த நிலையில் அவர், நமது கழகத்தை ஒரு பொருட்டாக எண்ணி எங்கே பேசப் போகிறார், அலட்சியப்படுத்திவிடுவார் என்று எண்ணி அஞ்சினோம். தவறான அச்சம் அது என்பது தலைவர்

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

வெள்ளை மாளிகையில்.......

சதிக்குள் சதி! [7]

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரிடம் 'கலந்து பேசவும்', 'உடன்பாடு காணவும்', 'உதவி பெற்றிடவும்' உலகில் பல்வேறு நாட்டின் தலைவர்கள் வருகை தருவர்; அப்போது அளிககப்படும் விருந்துகளில், உபசரிகக—அளவளாவ—குடிஅரசுத் தலைவரின் துணைவியார் உரிமை பெறுகிறார். குடிஅரசுத் தலைவரின துணைவியார், நாட்டின் முதல் ஆரணங்கு எனும் அரியநிலை பெறுகிறார். டக்ளஸ் டில்மன தாரமிழந்தவர்; எனவே துணைவியாருககுப் பதிலாக, பணபுள்ள ஒரு மாது இந்தப் பக்குவமான காரியத்தைக் கவனித்துக்கொள்ளத் தேவை. இதனை அறிநதே, வாட்சன் எனும் செனட்டரின் மகள் சாலிவாட்சன், அந்தப் பதவியைக கேட்டுப் பெற்றாள.

குடிஅரசுத் தலைவர் நடத்திடும் விருந்துகளுக்கு, 'தக்காருக்கு' அழைப்பு அனுப்புவது, விருந்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் கவனித்துக்கொள்வது, விருநதில கலந்து கொள்ள வருபவர்களிடம் உரையாடி மகிழ்விப்பது என்பவைகள் சாலிவாட்சன் மேற்கொணட அலுவல்கள்.

தனககுத் துணைவியில்லாததால், இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது என்பதனால் மட்டுமல்ல, இது பொறுத்தமானது என்பதாலும் டில்மன மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும. வெள்ளை மாளிகையில் எலலாமே 'கருபபுமயம' ஆகிவிடவில்லை; குடிஅரசுத் தலைவா மட்டுமே 'கருப்பு'. ஆனால், விருந்தினை நடததிவைக்க; உரையாட, உபசரிகக அமர்த்தப்பட்டிருபபவரும் கருபபு அலல; வெள்ளை இனமாது!! — என்பதிலே வெள்ளை இனததவர் மிகுந்த மகழ்ச்சி கொள்வரல்லவா!

துணைவியார் இறந்தபிறகு டில்மன் தனியாக இருந்து வந்தார்; ஆனால் அவருடைய உள்ளம மெள்ள மெள்ள வேறோர் மாதிடம ஈர்க்கப்பட்டு வந்தது. அறிவும அடகக உணர்வும், பண்பும நிறைந்த ஒரு மாதினை அவர் உளமார நேசிததார். திருமணம செய்து கொள்ளலாம என்ற முடிவுககு அவர் வருகிற சமயததிலேதான், குடிஅரசுத தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்!

அந்தப் பெரிய பதவியில் இருந்துகொண்டு திருமணத்தை நடத்திக்கொண்டால், மிகச் சிறபபாக அல்லவா இருக்கும; நாடே விழாக்கோலம கொள்ளுமே; உலகின் பல நாடுகளின தலைவர்கள் வாழததுக்கூறிட வருவார்களே, எத்தனைக் கோலாகலமாக நடததிக் கொள்ளலாம; ஏன் டில்மன் தாமவிருமபிய மாதைத திருமணம செய்துகொண்டு வெள்ளை மாளிகை அழைததுச செல்லவில்லை. சென்றிருநதால் சாலி வாட்சன் தேவைபபட்டிருக்க மாட்டாரே! சதி நாடகம் நடந்திடவே இடம கிடைத்திருககாதே என்றுதான் எண்ணிடத் தோன்றும்—எவருககும். ஆனால் டில்மன் மனதில் வேறு விதமான கருத்து!

ஒரு நீக்ரோ, குடிஅரசுத் தலைவரானது மட்டுமல்லாமல், இந்த வாய்ப்பைப் பயன் படுத்திககொண்டு, திருமணமும் செய்துகொண்டு, விழா நடத்திககொளகிறான், எத்தனை வீண பெருமை! என்று வெளளையரில வெறியர் கேலி பேசுவர். வெள்ளை மாளிகையில், தலைவர் மட்டுமல்ல, அவருடைய துணைவியாரும் கருநிற இனம்; எப்படித தாங்கிக்

கொள்வது, சகித்துக்கொள்வது என்று வெறுப்புடன் பேசுவர். எதற்காக வீண்வம்பைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் டில்மன் எண்ணியிருந்திருக்கவேண்டும். அதனால்தான் அவர் தாம் மிகவும் விரும்பிய வாண்டா கிப்சன் எனும் மாதைத் திருமணம் செய்துகொள்வது தமது நிலைமைக்கு முறையாக இருக்காது என்று கருதிக்கொண்டார்.

தமக்குக் கிடைத்த பதவியைத் தமது பெருமைக்காகவும் சுவைக்காகவும் துளியும் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என் பதிலே அவ்வளவு அக்கறை காட்டினார்.

வாண்டா கிப்சன், கருநிறம்கூட அல்ல; கவர்ச்சிமிக்க மாந்தளிர்மேனி! நீக்ரோ இனம் என்றுகூடக் கூறிவிடுவதற்கில்லை. நீக்ரோ—வெள்ளையர் கலப்பிலே பிறந்து, ஒரு தலைமுறை கடந்த இனம்! முலாட்டோ என்பது அவர்கட்கு இடப்பட்டிருந்த பெயர். டில்மன்போலவே, கிப்சன் பெருந்தன்மை கொண்டவராக இருந்திருக்க வேண்டும் எனத்தெரிகிறது. நூற்றிலே தொண்ணூறு பெண்கள், தன்னை விரும்புபவர், தகுதிமிக்க இடம் பெற்றிடும்போது, திருமணம் செய்துகொள்ளும்படி அல்லவா வற்புறுத்துவார்கள்! கண்ணைக் கசக்கிடுவர்! அன்றோர் நாள் சொன்னதனை அடியோடு மறந்தீரோ என்று கேட்பர்; உயர்ந்துவிட்டீர், உள்ளத்திலிருந்து என்னைத் தூக்கி எறிந்துவிட்டீர் என்று கோபத்துடன் பேசுவர், பார்க்கிறோம்; கதைகளிலே மிகச்சுவையான கட்டங்களாக இவை அமைந்திருப்பதை. வாண்டா கிப்சன், தன் காதலனுக்குத் துளியும் சங்கடம் ஏற்படத் தக்கவிதமாக எந்த நிலைமையும் எழக்கூடாது என்ற பெருங்குணம் கொண்டவராக இருந்திருக்கிறார்.

ஆகவே டில்மன் திருமணம் செய்துகொள்ளவில்லை; சாலி வாட்சன் வெள்ளை மாளிகையில் சீமாட்டி வேலை பார்த்து வந்தாள்.

குடிஅரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகும்நிலை.

விருந்து, வைபவம் ஆகியவற்றினை ஏற்பாடு செய்திடும் அலுவல்; ஆகவே எப்போதும் அணிபணி பூண்டு, நகைமுகம் காட்டி இருந்திடும் நிலைமை.

மனதைக் கட்டுப்படுத்திக்கொள்ளும்; திறனற்றவர்களின் மனம் நெகிழ்ந்து போவதும், தவறுகள் நேரிட்டுவிடுவதும், நெருக்கடிகள் விளைவதும், இத்தகைய சூழ்நிலையில்தானே!!

ஆளப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவத்துடன் நடந்துகொள்ளும் வெள்ளையர்மீதே ஆட்சி நடத்தும் வாய்ப்புக்கிடைத்தாலே போதும், தலை சுற்றும்; கால் பூமியில் அழுத்தமாக அமைந்திடாது, கொடுமை செய்திடத் தோன்றும்; கோலாகலமாக நடந்திடத் தோன்றும்; எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத் தோன்றும்! அதுமட்டும் போதாமல், அழகிய இளமை மெருகு குலையாத, ஆடிப்பாடி மகிழ்விக்க வல்ல ஒரு வெளளைச் சீமாட்டியும, தன் பக்கம் நின்று, பாசம் நிறைந்த பார்வையை வீசியும், பாகு நிறைந்த சொல்லினைத் தந்தும் வந்திடின், கிடைந்தது இன்ப வாழ்வு! என்று கருதி, களியாட்டத்தில் அடடவா மூழ்கிடத் துடிப்பர், நூற்றுக்கு அறுபதுபேராகிலும். டில மன் மனதிலே இறுமாப்போ, மயக்கமோ, தூய்மையற்ற எண்ணமோ, துளியும் இடம்பெறவில்லை. இருந்தும், அவர்மீது, சாலிவாட்சன் என்ற வெள்ளை மாதினைக் கற்பழிக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு; சாலியே தொடுக்கிறாள் அந்த குற்றச்சாட்டை.

வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு விருந்து நடைபெறுகிறது. சுவைமிகுபானம்! சொக்கவைக்கும் பேச்சுகள்! ஒளிவிடு பார்வை! ஒய்யார நடை! போதைமிகுந்திடும்நிலை! டில்மன் இந்த மயக்கம் எதிலும் சிக்கிடவில்லை. விருந்தளிப்பது, தனது கடமையின் ஒரு பகுதி என்று மட்டுமே கருதி அதிலே கலந்துகொண்டார்;

சாலி? உல்லாசியாகக் காட்சிதந்தாள்; அளவுக்கு அதிகமாகவே உட்கொண்டாள்; ஆனால் உட்கொண்ட போதைப் பொருளைவிடக் கொடிய சதி எண்ணம் அவள் மனதிலே நிரம்பிக்கிடந்தது. எப்படியும் அன்றிரவு டில்மனுடைய இரகசியக் குறிப்புகளைக் கண்டறிந்து, அவற்றினை ராஜாங்கமந்திரியும் தன்காதலனும் — எதிர்காலக் கணவனுமான — ஈட்டனிடம் தந்துவிடுவது என்று துணிந்துவிட்டாள்.

விருந்து மண்டபம்விட்டு டில்மனும் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த விருந்தினர்களும வேறோர் கூடம் சென்று ஏதோ ஓர் படக்காட்சி காண ஏற்பாடாகி இருந்தது. தனக்கு தலைவலியாக இருப்பதாகவும், வீடுசெல்வதாகவும் கூறிவிட்டு, விடைபெற்றுக்கொள்கிறாள் சாலிவாட்சன்.

வீட்டுக்கு அல்ல, டில்மனுடைய படுக்கை அறை செல்கிறாள்! — அவருடைய குறிப்பு ஏடுகளைக் கண்டெடுக்க! கிடைத்துவிடுகின்றன. அவைகளைத் தனித் தனித் தாட்களில் குறித்துக்கொள்கிறாள் விரைவாக,

ஜனதா ஆயுர்வேத வைத்தியசாலை
JAVS
உரிமையாளர்
M.அமீர்பாட்சா
மதராஸ் ஸ்டேட் சோல் ஏஜண்ட்
54, சோலைஹால்ரோடு. * திண்டுக்கல்.

ஏஜன்சி இல்லாத ஊர்களுக்கு ஏஜன்சி தேவை!

எங்களிடம் கோல்டன் டானிக் [பேட்டன் டானிக்] தசமூலாரிஷ்டம், பிரசாதிக்கசுதா, பாலாமிருதம், சுதாமிருதம், கதலிக்கல்ப்பம், செவனப்பிரகாசம், ரதிரமணன், ஆஸ்த்துமா, க்ஷயம், டி. பி. இவைகளுக்கு சிறந்த லேகியம்

‘கருங்குரங்கு ரஸாயனம்’
மற்றும்
‘மதுகாசவம்’

முதலிய ஆயுர்வேத மருந்துகளும் கிடைக்கும்.

ஏஜன்சிகளுக்கு நல்ல கமிஷன் கொடுக்கப்படும்.

திடீரென யாரோ நடமாடும் அரவம் கேட்கிறது. ஒரு கணம் மிரட்சி! மறுகணம் சதி தயாராகிவிடுகிறது. விளக்கை அணைத்துவிடுகிறாள். மயங்கி விழுந்தவள் போல, கட்டிலிலே சாய்ந்துகொள்கிறாள்.

உள்ளே வெண்ணிற நாகம் இருப்பது அறியாமல் நுழைந்த டில்மன், படுக்கை அறைக்கதவினைத் தாளிட்டுவிட்டு, விளக்கைப் பொறுத்துகிறார்; காட்சி அவரைத் திணறச் செய்கிறது.

நள்ளிரவு நேரத்தில், சாலீவாட்சன், தன் கட்டிலின் மீது! அலங்காரப் பதுமை! ஒய்யார உருவம்! வெள்ளை மாது! சிங்காரவல்லி! அவள் படுத்துக்கிடக்கிறாள், ஆடை நெகிழ்ந்த நிலையில். அறையையோ தானே தாளிட்டிருக்கிறார்!

வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர், குடி அரசுத் தலைவர்! அவர் படுக்கை அறையில் ஒரு வெள்ளைமாது! நள்ளிரவில்! கட்டிலின்மீது! என்ன கருதுவர் வெள்ளை மாளிகை அலுவலர்கள் இது கண்டிடின். அமெரிக்காவே அதிர்ச்சி அடையுமே இதுபற்றிக் கேள்விப்பட்டால். வெள்ளையர் மனம் எரிமலையென வெடிக்குமே. அவர் மனதிலே, அந்தச்சமயம் என்னென்ன அதிர்ச்சி தரத்தக்க எண்ணங்கள் கிளம்பித்தாக்கினவோ, எவ்விதமான திகைப்பும், திகிலும்கொண்டாரோ, யாரறிவர். எப்படி இருந்திருக்கும் அவர்நிலை என்பதை எண்ணும்போதே நடுக்கம் பிறந்திடும் பலருக்கு.

அருகே செல்கிறார், உற்றுப்பார்க்கிறார், மிகுந்த வேதனையை அடக்கிக்கொண்டு. அவள் மயங்கிச் சாய்ந்திருப்பதுபோலத் தெரிகிறது! தோற்றம், அவள் நடிப்பு அவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது.

குடிமயக்கத்தில் 'இடம் புரியாமல் வந்து படுத்துக்கொண்டாள் என்று எண்ணிக்கொண்ட டில்மன், சாலியை எழுப்பினார்.

தொட்டு எழுப்பும் வரையில் எழுந்திருப்பாளா— தூங்காமல் தூங்கும் சாலி! எங்கோ கனவுஉலகிலிருந்து திரும்புவதுபோல ஒரு பாவனை காட்டினாள். கண்களைத் திறந்தாள், மீண்டும் மூடிக்கொண்டாள், மறுபடி திறந்தாள் ஒரு மிரட்சிப் பார்வை!

யார்...இங்கே எப்படி நீங்கள்...ஏன் வந்தீர்கள்... அய்யோ!...நான் எங்கு இருக்கிறேன்...

தம்பி! வழக்கமான திகைப்பு, வியப்பு, அதிர்ச்சி! நாடகத்திலே பார்க்கிறோமல்லவா, சாகசக்காரிகள் தம்மிடம் சிக்கிக்கொள்ளும் ஆடவரைச் சாய்த்திடும் காட்சியினை.

என் படுக்கை அறையில்வந்து படுத்துக்கொண்டாயே சாலி! யார் கண்களிலாவது பட்டிருந்தால் என்னகதி......

உங்கள் படுக்கை அறையா......அய்யோ...... ஆமாம்,......தலைவருடைய தனி அறைதான்......இங்கு எப்படி நான் வந்தேன்......ஏன் என் தலையிலே இவ்வளவு குடைச்சல்......

விருந்திலே சற்று அதிகமாக உட்கொண்டுவிட்டேன், மயக்கமாக இருக்கிறது, வீடு செல்கிறேன்! தலைவலி என்று சொல்லிப் புறப்பட்டாயே சாலி!

ஆமாம்......இப்போதுதான் நினைவிற்கு வருகிறது ......மயக்கம்......தடுமாற்றம்......எங்காவது சென்று படுத்துத் தூங்கியாகவேண்டும் என்ற நினைப்பு......

அகவிலையே இறங்கி வா!

உயர்ந்துயர்ந்து பறக்கின்ற பறவை மற்றும்
உலகனைத்தும் சுற்றிவரும் ஊர்தி கூட
அயர்ந் தொருநாள் கீழிறங்கி வந்து சேரும்.
அகவிலையே! உன்னுயர்வின் இறக்கம் என்றோ?

ஆண்மையுடன் மாற்றாரை அடிமை கொண்ட
அகங்காரத் தன்மையெலாம் ஒடுங்கும் நாளில்
ஊண்வகைகள், உடைவகைகள் உறையு ளெல்லாம்
உனக்கடிமை யாகியதன் மகிமை என்னே?

நஞ்சாக அகவிலைமேல் உயரும் போதில்
நஞ்சுண்டாற் போல்மாந்தர் நலிகின் றாரே!
எஞ்சிநிற்கும் பொருள்அனைத்தும் விற்று உண்ணல்,
ஏதுமிலார் களவாடல், உயிரை மாய்த்தல்,

கொஞ்சுமொழி குழவிதமை ஏலம் பேசல்,
கூசாமல் தன்மானக் கற்பை விற்றல்,
பஞ்சுவினுள் தீப்போலப் பரவும் இந்நோய்
பண்பாட்டை சுட்டெரித்தல் அறியா யோநீ!!

கருவில்உரு தரிப்பதற்கும் தடைகள் நீயே!
கணக்கற்றோர் கெடுவதற்கும் வகைகள் நீயே!
உருவாயின் உயர்வில்ஒரு வழியைக் கேட்டால்,
வந்திருந்தே நீயும்இதில் பங்கு பெற்றே

உருவாகி உன்நிலையில் உயர்வுக் கண்டு
ஓஓஓ எங்களையும் வதைக்கின் றாயே!
அருள்வாயேல் ஒருதடவை இறங்கி வந்து
அதுவெங்கள் சிறுவாழ்வில் பெரிதாய்த்
தோன்றும்!

—இல. சாம்பசிவம்.

இது வேறு ஏதோ ஒரு அறை என்று எண்ணி......மன்னிக்கவேண்டும்......

பரவாயில்லை...இப்படியெல்லாம் சில வேளைகளில் நடந்துவிடுவதுண்டு......பரவாயில்லை......எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக்கொள் சாலி! மோடார் வரவழைக்கிறேன்......வீட்டுக்குப்போ!

அய்யோ! ஆடைகள், இப்படியா அலங்கோலமாகவா படுத்துக்கிடந்தேன்......என்ன தவறு செய்துவிட்டேன்......பெருந்தவறு......

நான் அந்தப் பக்கமாகச் சென்றுவிடுகிறேன்; சாலி! நீ எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக்கொள்.

சாலி திடுக்கிட்டுவிட்டதுபோலப் பாவனை காட்டி எழுந்திருக்கிறாள்; படுக்கைமீது இருந்த அவளுடைய 'கைப்பை' கரம்பட்டுக் கீழே விழுகிறது; விழும்போது அதற்குள்ளே இருந்த பொருள்கள்—குறிப்பு அட்டைகள்—கீழே சிதறிவிழுகின்றன. டில்மன் அவைகளை எடுக்கிறார்.

அவள் அலறுகிறாள்! வேண்டாம்! வேண்டாம்! நான் எடுத்துக்கொள்கிறேன்! ஒன்றுமில்லை...சாதாரண குறிப்பு அட்டைகள்......நானே எடுத்துக்கொள்கிறேன்...

இந்தவாரம் இந்த நாட்டில்...

புதுடில்லி, மார்ச். 18— மக்களவையில், பட்ஜெட் மீதான வாதத்திற்குப்பதிலளிக்கையில் "புதிய வரிகள் அனைத்தும் மக்களால் தாங்கக்கூடியது தான்" என்றார் நிதியமைச்சர் சௌத்ரி.

சென்னை, மார்ச். 18-நாட்டில் நடைபெறும் பலாத்கார சம்பவங்களால் ராணுவ சர்வாதிகாரம் ஏற்படும் அபாயம் உள்ளது என்றார்காமராசர்.

புதுடில்லி, மார்ச், 19—எல்லா தேர்தல் நீதி மன்றங்களையும் ரத்துச் செய்துவிட்டு ஹைகோர்ட்டுகளே தேர்தல் வழக்குகளை விசாரணை செய்யும் முறை விரைவில் நடைமுறைக்கு வரும் என்று சட்ட அமைச்சர் ஜி. எஸ். பாடக் அறிவித்தார்.

சென்னை, மார்ச். 20—உணவுப் பண்டங்களுக்கும், பாலுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிப்பது பற்றி விரைவில் யோசிக்கப்படும் என்றார் தொழிலமைச்சர் ஆர். வெங்கட்ராமன்.

சென்னை, மார்ச். 20—தேர்தல் நிதிக்காக தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ரூ. 5000 நிதி திரட்ட த. நா. கா. க. முடிவு செய்துள்ளது.

சென்னை, மார்ச். 20—பரீட்சையில், ஒரு தடவைக்கு மேல் தவறும் மாணவர்களிடமிருந்து ரூ. 30 - அபராதமாக வசூலிக்கப்படும் என்று முதலமைச்சர் பக்தவத்சலம் சட்ட மன்றத்தில் தெரிவித்தார். இதே காரணத்துக்காக பரீட்சை முறைகளைத் திருத்தி அமைப்பது பற்றிய கருத்து பரிசிலனையில் இருப்பதாக மத்திய கல்வி அமைச்சர் சக்ளா அறிவித்துள்ளார்.

பெங்களூர், மார்ச். 22—சட்ட மன்றங்களில் நடைபெறும் அசம்பாவிதங்களைப் பத்திரிகைகள் பிரசுரிக்கத் தடை விதிக்க வேண்டும் என்று மைசூர் சட்ட மன்றத்தில் ஒரு உறுப்பினர் கேட்டார்.

சென்னை, மார்ச். 22—அதிகாரிகள் அல்லது மற்றவர்கள்மீது புகார்கள் தெரிவித்து கடிதங்களோ, மனுக்களோ சட்ட மன்ற உறுப்பினர்கள் அனுப்பினால், அனுப்பும் உறுப்பினர்களுக்கு அரசாங்கப் பாதுகாப்புக் கிடையாது என்றார் சபாநாயகர் செல்லபாண்டியன்.

குடந்தை, மார்ச். 22— ஒரு பார்லிமெண்டரி அரசியல் கட்சியாக இனி இயங்குவதென்றும், தீவிரமாக அரசியலில் ஈடுபடுவதென்றும் தமிழரசுக் கழகப் பொதுக் குழு முடிவு செய்துள்ளது.

கொகிமா, மார். 23—கலக நாகர்கள் தாங்கள் சுதந்திரமடைந்துவிட்டதாகவும், தங்கள்நாடு சுதந்திரக் குடியரசு என்றும் கூறி விழாக் கொண்டாடினர்.

புதுடில்லி, மார். 23—பஞ்சாப் மாநிலத்தை 'பஞ்சாபி சுபா', 'ஹரியானா', 'ஹிமாசலபிரதேஸ்' என்று மூன்று மாநிலங்களாகப் பிரிக்க முடிவு செய்துவிட்டதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

டில்மன், குறிப்பு அட்டைகளைப் பார்த்துவிடுகிறார்! எல்லாம் விளங்கிவிடுகிறது. ஆத்திரம் அல்ல, அளவற்ற வருத்தம் பிறக்கிறது அவருக்கு.

நிறவெறிகாரணமாக எவ்வளவுகீழ்த்தரமான செயலுக்கும், இழித்தன்மைக்கும் சென்றுவிடத் தோன்றுகிறதே என்பதுபற்றி எண்ணி வருத்தப்பட்டார்.

ஒன்றும் இல்லை; தவருக எண்ணிக் கொள்ளாதீர்கள்...குறிப்புகள் எடுக்தேன்...எதற்காகவோ என்று எண்ணிக்கொள்ளாதீர்கள்...உங்கள் வாழ்க்கை பற்றி ஒரு புத்தகம் எழுதப்போகிறேன்...ஒரு நாள்...அதிலே சேர்ப்பதற்காக இந்தக் குறிப்புகள்...

புரிகிறது சாலி, புரிகிறது! இதற்காகத்தானு இங்கு வந்தாய்! ஈட்டனுக்கு வேலை செய்ய, என்னிடம் வேலைக்கு அமர்ந்தாய்......தெரியும்......போ! இந்த இடத்தை விட்டு...உன் குறிப்பு ஏடுகளைக் கொடு ஈட்டனிடம்...வேலையை முடித்துவிட்டேன் என்று கூறிவிடு ,..போ! சாலி! இனி இங்கு வரவும் வேண்டாம்...

ஈட்டனைப் பற்றி எனக்கென்ன கவலை. அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம். அவன் மணமானவன்...மனைவி இருக்கிருள்...நான் அவனுக்காக எதையும் செய்யவில்லை...எங்களுக்குள் என்ன தொடர்பு... எங்கள் இருவரையும் இணைத்துப் பேசாதீர்...

நாடே பேசுகிறது! நானும் அறிவேன்...ஈட்டன் குடிஅரசுத் தலைவர் வேலை பார்க்க விரும்புகிருன்...நீ அவனுக்காக இங்கு வேலை பார்க்கிருய்...புரிகிறது...

உண்மையைச் சொல்லிவிடுகிறேன்...கூச்சத்தை விட்டு...ஈட்டனுக்காக நான் எதுவும் செய்யவில்லை... குறிப்பு எடுத்தது புத்தகம் எழுதத்தான்...இங்கு வந்தது குறிப்பு எடுக்க அல்ல...தனியாகச் சந்திக்க... பழகி...பாசமாக இருந்திட......விரும்புவதால்......அன்பினுல்...

சீமாட்டி சாகசம் நடத்திட முனைந்தால் எப்படி இருக்கும் என்பதுபற்றி அதிகமான விவரமா தர வேண்டும்.

வெள்ளை மாளிகையில், அந்த நள்ளிரவில், கட்டிலறையில், கருப்பு இன டில்மன் கரங்களைப் பற்றிக் கொண்டு, வெள்ளை இன சாகசக்காரி காமப் படுகுழிக்கு அழைப்பு விடுகிருள்; தழுவிக் கொள்ளத் துடிக்கிருள்.

தனியாகத் தவிக்கிறீர்கள், பாவம்...என் மனம் பாகாய் உருகிவிட்டது...என் நேசம் வேண்டாமா... நானே உம்மிடம் நேசமாக இருந்திடத் துடிக்கிறேன... அதனுல்தான் இங்கு வந்தேன்; உங்களுக்காகக் காத்துககொண்டிருந்தேன்... ..அதுவரையில் பொழுதை ஓட்டவேண்டுமே...அதனுல் உம்முடைய குறிப்பு ஏடுகளைப் புரட்டினேன்...சிலவற்றைக குறித்துக்கொண்டேன், புத்தகம் எழுதப் பயன்படும் எனபதற்காக.

கைப் பையில், குறிப்புத் தாட்களைத் திணித்து அவளிடம் கொடுத்தான் டில்மன்; வெறுப்பும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறினுன் போ! உடனே! வெளியே! —என்று.

சாலி; கடைசிக்கணையையும் ஏவிடமுனைந்தாள்...

பயமா...நான் வெள்ளை மாது என்பதால் பயமா... வெளியே தெரிந்தால் பகை கிளம்புமே என்ற பயமா... எனக்குக்கருப்புஇனத்தின் மீதுவெறுப்புக்கிடையாது...

நிறபேதம் கிடையாது......சொல்லப்போனால் கருப்பு இனத்தின்மீது எனக்கு விருப்பம்கூட...ஆமாம்...பலருடன் பழகி இருக்கிறேன்; கருப்பு இனத்தவரிடம்... எனக்கு மிகவும் விருப்பம்...பயம் வேண்டாம்...துளியும் ...நான் என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன்...ஏற்றுக் கொண்டிடுங்கள்.

இணங்க மறுத்தான் டில்மன். அடிபட்ட புலியானாள் சாவி!

மாதின் மனதை அறிந்துகொள்ள முடியாத மதியிலி!

சுவை உணர முடியாத மிருகம்!

ஒரு பெண்ணின் உள்ளத்தை மகிழ்விக்கத் தெரியாத உலுத்தன்!!

சுடுசொற்கள் மளமளவெனக் கிளம்பின. அந்தத் தூற்றலுக்கு இடையிலே அவள் டில்மனுக்கு எதிராக உருவாகிக்கொண்டு வரும் சதி பற்றியும் கோடிட்டுக் காட்டினாள்.

இருகால் மிருகமே! இன்னும் எத்தனை நாளைக்கு உனக்கு இந்த வெள்ளை மாளிகை வாசம். உன் காலம் முடிகிறது, வெகுவிரைவில். வெள்ளை மாளிகையில் இன்னும் எத்தனை நாளைக்குக் காட்டுமிராண்டி கொலு இருந்திட முடியும்? இந்த இடத்திற்கு ஏற்ற பெரிய மனிதர் வருகிறார், புறப்பட, வெளியேறத் தயாராகி விடு!

ஏற்கனவே ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரியும் நிறவெறி கொண்ட இதழாசிரியர்களும், டில்மனை விரட்டிவிடத் துடிதுடித்தபடி இருந்தனர்.

எதிர்த்துப் பேசுவதோ, இறுமாந்து கிடப்பதோ தனது முறையாக்கிக் கொணடிருந்தால். டில்மனை ஒழித்துக் கட்டும் வேலையை அவர்கள் எளிதானதாக்கிககொண்டிருந்திருப்பார்கள்.

துளியும் தன்னலம் காட்டாமல், தலைகனம் கொள்ளாமல், பதவியைத் தன் உயர்வுக்காகவோ, தனக்கு வேண்டியவர்களின் உயர்வுக்காகவோ பயன்படுத்தாமல், நேர்மையாக, நாணயமாக நடந்துகொள்கிறார். ஆனால் அதே நேரத்தில், எவருடைய மிரட்டலுக்கும் வளைய மறுக்கிறார். குடிஅரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு அளித்திடும் செய்தி என்ற பெயரில் உரை நிகழ்த்துவதும். அந்த உரையைப் பெரிய அதிகாரிகள் தயாரித்துக் கொடுப்பதும், தயாரித்துத் தரப்பட்ட உரையையே தம்முடைய பேருரை என்று படித்து முடிப்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த ஒரு பழக்கம்; முறை. அதன்படி டில்மனுக்கு வெள்ளைப் பேரதிகாரிகள் உரை தயாரித்து அனுப்புகிறார்கள். அதிலே இன்ன குறை இருக்கிறது, இப்படி மாற்றவேண்டும், இன்ன கருத்தைச் சேர்க்கவேண்டும் என்றுகூடக் கூறவில்லை, கலந்து பேசவில்லை, வாதாடவில்லை; அதற்கு மாறாக, எனக்காக உரைதயாரித்துக் கொடுத்ததற்கு எனது நன்றி. ஆனால் நானே பேருரை தயாரித்துக்கொண்டுவிட்டதால், தாங்கள் அனுப்பிய உரையைத் திருப்பி அனுப்பி இருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும். எனக்காகத் தாங்கள் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு என் நன்றி—இவ்விதமாக அல்லவா கடிதம அனுப்புகிறார்.

குடிஅரசுத் தலைவராக்கப்பட்ட கருப்பனாக நடந்து கொள்ள மறுக்கிறார்; குடிஅரசுத் தலைவராகவே நடந்து

இந்த வாரம் வெளிநாட்டில்...

ஹூஸ்டன், மார். 18—'ஜெமினி 8' என்ற விண்வெளி கோளில், வானவெளியில் பயங்கர நிலையிலிருந்து ஆம்ஸ்ட்ராங், டேவிட்ஸ்காட் என்ற இருவரும் மிகத் திறமையோடு தப்பினர்.

கொழும்பு, மார். 18—1964ல் ஏற்பட்ட இந்தியா-இலங்கை ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து, இந்தியாவில் வந்து குடியேறுவோருக்கான உதவித்திட்ட நகல் ஒன்றை இந்திய அரசு அனுப்பி இருப்பதாக இலங்கை அரசு அறிவித்தது.

வாஷிங்டன், மார். 18—இந்தியா, பாக்கிற்கு மீண்டும் ராணுவ உதவி அளிப்பதுபற்றிய பிரச்னை இன்னும் முடிவாகவில்லை என்று டீன்ரஸ்க் அறிவித்தார்.

வாஷிங்டன், மார். 20—யுத்தம் ஒன்று வருமானால், அதில் யு. எஸ்சின் அணு ஆயுதக் காக்குதலைக் கண்டு சீனா அச்சம்கொண்டிருக்கிறது; அந்தத் தாக்குதலுக்கு முன்னால் சீனா நிலைகுலையும் என்று புரொபசர் நார்ட்டன் ஹால்ப்ரின் அறிவித்தார்.

கொழும்பு. மார். 20—காஷ்மீர் விவகாரத்தில்புட்டோவின் பேச்சு, குதிரைக்கு முன்னால் வண்டியைக் கட்டுவது போன்றதாகும் என்று 'டெய்லி நியூஸ்' என்ற நாளிதழ் கருத்தறிவித்துள்ளது.

நியூயார்க், மார். 20—ஏராளமான அந்நிய மூலதனத்தை ஏற்கும் சக்தியுள்ள பிற்பட்ட நிலையில் இந்தியா இருக்கிறதென்று பேராசிரியர் கால்பிரெய்த் அனைத்து நாட்டு அபிவிருத்திக் கழக மாநாடொன்றில் கூறினார்.

மாஸ்கோ, மார். 21—வட வியட்நாமுக்கு ரஷ்யா அனுப்பும் உதவி சப்ளைகளை இடைமறிக்கும் புது முயற்சியை சீனா மேற்கொண்டிருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் கருதுவதாகத் தெரிகிறது.

பீகிங், மார். 21—கனாவின் ஆட்சியை மீண்டும் கைப்பற்ற நெக்ருமாவுக்கு சீனா ஆதரவளிப்பதாகக் கனா கூறியதை, பீகிங் மறுத்திருக்கிறது. எனவே, சீனாவாலும் நெக்ருமா கைவிடப்பட்டுவிட்டார் எனத் தெரிகிறது.

லைபீரியா, மார். 21—கனா நாட்டுக்குள் படைகளை அனுப்பி நெக்ருமாவுக்கு உதவி செய்ய கினி முன்வரக்கூடும் என்ற ஐயத்தில், கினி-கனா எல்லைப் பகுதியில் அளவுக்கு அதிகமான படைகளை அனுப்பிப் பாதுகாப்பு மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கராச்சி, மார். 21—பாகிஸ்தானுக்குப் பாதுகாப்பும், சமாதானமும் அவசரத் தேவைகள் என்றாலும் பாதுகாப்புக்கே முதலிடம் தரப்படும் என்றார் அதிபர் அயூப்கான். இந்தியாவைப்போல பெரிய ராணுவம் வேண்டும் என்றும் அவர் கருதுவதாகத் தெரிகிறது.

பாரிஸ், மார். 22— பென்பர்க்காவைக் கடத்திச் சென்ற இரண்டு போலீஸ்காரர்களுக்கு அநேகமாக ஆயுள்தண்டனை விதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

கொள்ள விரும்புகிறார்; இது தாங்கிக்கொள்ள முடியாத தொல்லை; அனுமதிக்கப்பட முடியாத ஆபத்து என்று வெள்ளைப் பேரதிகாரிகள் முடிவு செய்தனர். அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான் ராஜாங்க மந்திரி வேலை பார்த்துவந்த ஈட்டன். அவன் எதிரில் போய் நின்றாள் சாலி வாட்சன் ஆடை கிழிக்கப்பட்டு, அலங்கோல நிலையுடன்! உடலிலே கூடச் சில கீறல்கள்!

என்ன அலங்கோலம்? என்ன நேரிட்டது......

கருப்பு வெறியன் என்னைக் கற்பழிக்க...

அவ்வளவு அக்ரமம் செய்யத் துணிந்தானா அற்பன்?

முயன்றான்......பெரும் போராட்டம்......தப்பித்துக் கொண்டேன் — அந்தப் பயங்கரமான முறட்டுப் பிடியிலிருந்து...இதோ கீறல்கள்...

ஆமாம்! இரத்தகாயம்! கரு நிறமிருகம் இனியும் உலவக் கூடாது...

கட்டிப் போட்டாக வேண்டும்...

விரட்டவேண்டும் வெள்ளை மாளிகையிலிருந்து.

ஏற்கனவே குவிந்துள்ள குற்றச் சாட்டுகளுடன் இதோ புதிய, பயங்கரமான, நாட்டு மக்கள் காதில் விழுந்ததும் கொதிப்பினை மூட்டத் தக்க குற்றம்...கற்பழித்தல்...

கற்பழிக்க முயற்சித்தல்......

வெள்ளை மாதை... சீமாட்டியை... செனட்டர் வாட்சன் திருக் குமாரியை.

டில்மன் மீது இத்தகைய முறையில் கண்டனக் கணைகள் தொடுத்ததும், அவனைப் பதவியிலிருந்து விரட்டி விடத் தீர்ப்பாகிவிடும்.

அந்தத் தீர்ப்பு கிடைத்ததும் அன்பே! குடிஅரசுத் தலைவர் ஆகவேண்டியது,...யார்......

நான்தான்...ராஜாங்க மந்திரி ஈட்டன்தான் அடுத்த குடிஅரசுத் தலைவர்! முறை அதுதான்...

ராஜாங்க அமைச்சர் ஈட்டனா! என்காதலர்ஈட்டன்! என் கணவர் ஈட்டன்!......

ஆமாம், ஆருயிரே! உன்னை மறந்தா...பதவி எவ்வளவு உயரினும், உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பு குறையுமா......

எப்போது, உமது மனவி என்று கூறிக் கொள்பவளிடமிருந்து விடுபடப் போகிறீர்? எப்போது விவாக விடுதலை? எப்போது சாலி வாட்சன், சாலி ஈட்டன் ஆகிவிடுவது?

சதி, தம்பி, ஒரே ஒரு வட்டம் அல்ல; வட்டத்திற்குள் வட்டம்; வட்டங்கள் என்ற முறையில்தான் இருந்திட முடியும்.

ஈட்டன், சதி செய்கிறான் குடிஅரசுத் தலைவர் ஆகிவிடுவதற்காக.

சாலி சதி செய்கிறாள் ஈட்டனின் மனைவி ஆவதற்காக.

ஈட்டனுக்காகச் சாகசம் காட்டி வேலை செய்கிறாள் சாலி! கற்பழிக்க முயற்சித்த குற்றம் சுமத்தப் படுகிறது டில்மன்மீது. தீர்ப்பைப்பற்றிய சந்தேகம் எழவே நியாயமில்லை. மிகப் பெரும் அளவு வெள்ளையர்கள் — அதிலும் நிற வெறி பிடித்தவர்கள் கொண்ட அவையில், ஒரு கருநிறத்தான் வெள்ளை மாதைக் கற்பழிக்க முயன்றதாக மெய்பிக்கப் பட்டுவிட்டால், பிறகு அவன் கீழே உருட்டப்படுவான் என்பதிலே என்ன சந்தேகம் எழ முடியும்.

கண் சிமிட்டினான்! பச்சைச்சிரிப்பு சிரித்தான்! அந்தத் தோட்டத்து மலர் எனக்குக் கிடைக்குமோ என்று கேட்டான்!

என்ற இவ்விதமான 'குற்றச் சாட்டுகளுக்கே' கருப்பரை, அடித்துக் கொன்று மரத்திலே தொங்கவிட்டிருக்கிறார்கள்! — நிறத் தூய்மையைக் காத்தாக வேண்டும் என்ற முறையை வெறியாக்கிக் கொண்ட அமெரிக்காவில்,

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது' டில்மன்மீது கண்டனக் கணைகளைச் சரமாரியாகத் தொடுத்துக் கொண்டிருக்கும்போது, இதழ்கள் வெறுப்பையும் கோபத்தையும் கக்கியபடி இருந்தபோது, தீர்ந்தது இவன் காலம் என்று மக்கள் பேசிக்கொண்டிருந்தபோது, மற்றோர் விசித்திரமான விபரீதம் நடக்கிறது.

(14-ம் பக்கம்பார்க்க)

தமிழ் நாட்டில் தனிச் சிறப்புடன் விளங்குவது

ஜெயா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

H. O. பெரியகுளம்

எங்களது பார்மஸியில் உற்பத்தியாகும்

ஆஸவங்களும் அரிஷ்டங்களும்

விற்பனை செய்ய ஏஜண்டுகள் தேவை.

போதுமான கமிஷன் கொடுக்கப்படும்.

N. B:— எங்கள் பார்மஸி சர்க்காரால் (**Recognised by Central Board of Indigenous Madicine Madras.**) அங்கீகரிக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறோம்.

திண்டுக்கல் பிராஞ்சில் தொடர்புகொள்க:

உரிமையாளர்: J. M. ராஜன்

ஜெயா பார்மஸி

6, நேருஜிநகர், மதுரைரோடு, திண்டுக்கல்.

PHONE: 348, 348-A, 438

பாண்டியன் திருமேனி

பதினேழாம் பகுதி

நச்சுக் கனியா?

மதுரை நகரின் கிழக்குக் கோடியிலிருந்த ஒரு குளக்கரையின் மீது, குதிரையை விட்டிறங்கினான் சோலையப்பன். அப்பொழுது இரவின் இருள் மெள்ள மெள்ளக் கரைந்து கொண்டிருந்தது. மரக் கிளைகளையும் கூடுகளையும் விட்டுப் புள்ளினங்கள் பலவித பண்களோடு பறக்கத் தொடங்கின. காற்றிலே மிதந்துவந்த உழவர்களின் ஏற்றப் பாட்டை அவன் காதாரக் கேட்டபடி, முகங் கழுவ குளத்தினுள் இறங்கினான்.

கல்லறையில் பொன்னையாவை அடைத்த மறுநாளே, மதுரையை விட்டுச் சென்றவன், பத்து நாடகள் கழிதது இன்றுதான் திரும்பியிருக்கிறான். இராமேச்சுரத்திலிருந்து குதிரைமீது இரவெல்லாம் பிரயாணம் செய்துவந்த களைப்பு, அவனுக்கு அதிகமாக இருந்தது. இருந்தாலும், தான் ஊரிலில்லாத அந்தப் பதது நாட்களிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி அறிய, அவன் மனம துடித்தது. ஆகவே முதலில் மாரிமுதது‌வைப் பார்த்துப் பேசிவிட்டுப் பிறகு வீட்டிற்குச் செல்லலாம் என்று எண்ணினான்.

"ஏனப்பா, சாலைவீதிக்கு எப்படிச் செல்ல வேண்டும்?"

"இதோ நேரே தெரிகிறதே, அதுதான் சாலை வீதி!"

இவ்வாறு இருவர் பேசிக்கொண்டது—கை காலகளையும் முகத்தையும தூய்மை செய்துகொணடு—கரை ஏறிவந்து, ஆலமரத்தின் வேர் மீது அமர்ந்த சோலையப்பனுக்குக் கேட்டது.

"சாலை வீதி! ஆமாம், செந்தாமரையும் அந்தத்தெருவில்தான் இருக்கிறாள்!" என்று அவன் மனம் எண்ணியது.

"தாங்கள் உடலாலும் உள்ளத்தாலும் மிகவும் களைத்துவிட்டிருக்கிறீர்! என் வீட்டிற்கு வந்து இளைப் பாறுங்கள் என்கிறேன்—தடைகூற மாட்டீரே?" என்று பொன்னையாவின் கல்லறைமீது மலர்மாலை சூட்டிவிட்டுத் திரும்பிய அன்றிரவு, பாகு மொழியில் செந்தாமரை பகன்றது, அவன் கவனத்திற்கு வந்தது.

"தூமகேதுவின் ஒற்றர் குழுவில்; அழகான கன்னிப் பெணகள உள்ளனராம்! அந்தப் புன்சிரிப்புக்காரிகளை ஏவிவிட்டே, அவன் புதுப் புதுத் துப்புகளை அறிகிறான்!" என்று இராமேச்சுரத்திலுள்ள புத்த விகாரததில் அறிவொளி அடிகள் என்ற பெரியார் புகனறதும், அவன் நினைவிற்குப் பாய்ந்து வந்தது.

கே.ஜி. இராதாமணாளன்

"செந்தாமரை!... தூமகேது!..."

அவன் மனதிலே துள்ளியெழுந்தது, ஒரு சந்தேகம். சிந்திக்கச் சிந்திக்க அந்தச் சந்தேகம், அவன் எதிரே பலவித பாவங்களிலே படமெடுத்து ஆடத் தொடங்கியது.

"தூமகேதுவை எப்படியும் பாண்டிய நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்பது என் வாழ்க்கையின் இலட்சியம்! அதற்கான காரணங்கள் பல! உம்மைப் போன்ற வீர வாலிபர்களின் தளராத முயற்சியினால்தான், அந்த வஞ்சகனை விரட்ட முடியும்! எனவேதான் தங்களுக்கு எந்த ஆபத்தும வரக்கூடாதென்று கருதுகிறேன்!" எனறு உணாச்சி மிக்க குரலிலே செந்தாமரை உரைத்த வார்த்தைகள, அவன காதுகளில் திரும்பவும் ஒலித்தன.

"அரண்மனையில் ஒரு விழா என்றாலோ-காவலனுக்கு ஒரு வரவேற்பு என்றாலோ — கண் சுழல, கை நெளிய, உதடு துடிக்க, உடல் சிரிக்க ஆடத்தவறுவதில்லையே இவள்! அப்படிப்பட்டவளுக்கு, ஊராள்வோனின் குருபோல விளங்கும் தூமகேதுவின் மீது என்ன ஆத்திரம், என்ன பகைமை, என்ன வஞ்சம் இருக்கமுடியும்! பார்வையின் ஜாலத்தால், பசப்பு மொழியால், என்னை ஏய்த்துவிட்டாள்! அவளது உதடுகளிலிருந்து உதிர்ந்த அவ்வளவு வார்த்தைகளையும், உள்ளத்திலிருந்து வெடித்துச் சிதறியவை என்று நானும் நம்பிவிட்டேன்! அவளது நடத்தை, பேச்சு, புன்னகை எல்லாவற்றையும் குறித்து இப்பொழுது யோசிக்க யோசிக்கத்தானே தெரிகிறது—அவளொரு நல்லபாம்பு — நச்சுக் கனி என்று! என்னை ஏய்த்தாள்! நான் ஏமாநதேன்!.........காட்டிலே நச்சுக்கனிகள் இருக்குமாம்—பார்ப்பதற்கு மிகுந்த அழகோடு, நல்ல வண்ணத்தோடு! அவை தித்திப்பு மிக்கவை, சுவைத்து இன்பம் கொள்ளத்தக்கவை என நினைத்து; அக்கனிகளை நோக்கிக் குதித்தோடுமாம்—குரங்கு! எட்டிப்பார்த்து, ஒன்றைத் தொட்டுப் பறிக்குமாம்! பல்லால் கடித்துப் பரபரவெனத்தின்னுமாம்! சில நொடிகளில் அந்த மநதி கிளையை விட்டுக் கிறுகிறுத்துத தரையில் விழுந்து செதது மடியுமாம்! அந்த நசசுக்கனியைப் போன்றவள்தான், இந்த அழகு மோகினியும்! இவளது கரும்பு மேனியிலும், களளச சிரிப்பிலும் போதைகொண்டு, அறிவிழநது, அழிவை அணைததவர் எததனைப் பேரோ? அந்தச் சோகப்பட்டியலிலே, இந்தச் சோலையப்பனையும் சேர்க்கத் திட்டமிட்டாள்! கணணால் வலைவிரித்தாள்—கனியிதழ்ச் சொல்லால் மது தெறித்தாள்! ஆடிப் பிழைப்பவள் எனற அலட்சியத்தால், அவள் கவாச்சி என கருத்தில் இருள் பாயச்சவில்லை! நாட்டின நலம என்றாள்—நயவஞ்சகன் தூம

கேதுவை நசுக்கவேண்டும் என்றுள் — அந்த வார்த்தையை உண்மை என்று நம்பினேன்! அந்த நம்பிக்கையினுல், அவள்மீது பற்று ஏற்பட்டதென்னவோ உண்மை! அவளுக்குத் தெரிந்த சாகசத்தால், அந்தப் பற்றைப் பெருக்கி, என் இதயத்தின் படர்கொடியாகக்கூட மாறிவிட்டிருப்பாள்! அழகொளியால் அவள் என்னை, பம்பரமாக ஆட்டுவித்திருப்பாள்! நானும் சுற்றிச் சுழன்று ஆடியிருப்பேன், ஆடுகிறேம் என்ற சுய நினைவு இல்லாமலேயே! தூமகேதுவின் ஒற்றர்களாகக் கன்னியருமுள்ளனர் என்று அறிவொளி அடிகள் சொல்லாமலிருந்திருந்தால், என் பெயரும் சேர்ந்து, வீழ்ந்தோர் பட்டியல் நீண்டிருக்கும்! ... தூமகேதுவின் வைரி நான் என்பதை எப்படியோ முன்னரே அறிந்திருக்கிருள்! அந்த நினைப்பு பலப்படும் விதத்திலே, வேல் எறிந்த பொன்னையா என் நண்பன் என்பதும், தெரிந்துவிட்டிருக்கிறது, அவளுக்கு! தூமகேதுவின் வைரியை இந்தப் பெண் வல்லூறு வட்டமிடுகிறது — நடவடிக்கைகளை அறிந்து—என்னை நாசப் படுகுழியில் தள்ள! அவள் என்னிடம் நடித்தாள்—இப்பொழுது நான் நடிக்கிறேன், காதல்போதை ஏறியவனைப்போல! என்னிடமிருந்து அவள் உண்மையைக் கவரப் பார்த்தாள்-ஏய்த்துப் பேசி எப்படியும் உண்மையைக் கக்கச்செய்கிறேன்!"

இவ்வாறு எண்ணிய சோலையப்பன், உடனே மாரிமுத்துவைப் பார்க்கவேண்டும் என்றதிட்டத்தை மாற்றிக்கொண்டான். அந்த நச்சுக் கனியை முதலில் சந்தித்துவிட்டு, பிறகு நண்பனைக் காணலாம் என்ற முடிவோடு அவன் எழுந்து, சாலை வீதியினுள் நுழைந்தான்.

இடையில் தண்ணீர்க் குடத்தோடு சென்ற ஒரு பெண்ணைக் கேட்டு, செந்தாமரையின் வீடு எது என்று அவன் அறிந்துகொண்டான்.

அந்த வீட்டின் தெருக்கதவு மூடியிருந்தது. அருகில் சென்று கையின் விரலால் தட்டினுன்.

"ஆதோவந்தேன!" என்றுகூறிய படி ஒரு பெண் வந்து, கதவைத் திறந்தாள்.

"யாரைத் தாங்கள் பார்க்கவேண்டும்?" என்று அவள் இனிமையும் மரியாதையும் நிறைந்த குரலிலே கேட்டாள்.

"செந்தாமரையின் வீடுதானே இது?"

"ஆமாம்!"

"செந்தாமரையைப் பார்க்க நான் வந்திருக்கிறேன்!"

"உள்ளே வாருங்கள்!"

அந்த வீடு வெளியில் தெரிவதை விட, உள்ளே மிகவும் பெரியதாகவும், அரண்மனைக்கு எந்த வகையிலும் குறையாத அலங்காரங்களோடும் இருந்தது.

"ஆடிப் பிழைப்பவள் என்று எண்ணியவளுக்கா, அரண்மனை போன்ற இவ்வளவு பெரிய சிறந்த வீடு இருக்கிறது?" என்றுநினைத்து சோலையப்பன் ஆச்சரியமடைந்தான்.

ஒரு விசாலமான அறையினுள் அழைத்துச் சென்று உட்காரும்படி அந்தப் பணிப்பெண் உபசரித்தாள்.

"அம்மா உப்பரிகையில் இருக்கிருர்கள்! தங்கள் பெயரைத் தெரிவித்தால், நான் போய் அம்மாவிடம் சொல்கிறேன்!"

"சோலையப்பன் வந்திருப்பதாகச் சொல்!"

அந்தப் பெண்ணின் முகத்தில் ஆச்சரியம் தோன்றியது. "தாங்கள்தாம் சோலையப்பரா?" என்று கேட்பதைப்போல ஏறிட்டுப்பார்த்து விட்டு, "இதோ ஒரு நொடியில் வருகிறேன்!" என்று கூறி, அவ்வறையைவிட்டு அவள் வெளியே சென்றுள்.

அந்த வேலைக்காரப் பெண்ணின் அடக்கவொடுக்கத்தையும், மட்டு மரியாதையையும், பேச்சிலே கலந்திருந்த இனிமையையும் கண்டு, அவன் வியந்தான்.

அவன் உட்கார்ந்திருந்த அறை மிகவும் அழகாகவும் ஆடம்பரமாகவும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கூரையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த வெள்ளிச் சங்கிலியில், தங்கவிளக்கு! தரையில் விலைமிகுந்த இரத்தின கம்பளங்கள்! பலகணிகளில் பட்டுத்திரைகள்! சந்தனக் கட்டையில் செய்த ஆசனங்கள்! இளமையும் எழிலும் இன்பக் கொந்தளிப்புச் செய்துகொண்டிருந்த துடியிடை கன்னியரின் விதவிதமான வண்ண ஓவியங்கள்—சுவரெல்லாம்!

அந்த அழகுச் சித்திரங்கள் அவனோடு பேசின! அற்புத நடனத்தால், அவன் மனதிலே இன்பத்தைக் கசியச் செய்தன!

அவனது கண்கள், அந்த அறையை ஒருமுறை சுற்றிப் பார்த்துவிட்டு, நடுவில் வைக்கப் பட்டிருந்த பளிங்குக் கல்லாலான புலியின்மீது சென்றன.

"ஒரு பெண்ணின் இருப்பிடம் கலையையே மூச்செனஎண்ணும் ஒரு நடனக் கன்னிகையின் இல்லம் -இங்கு புலிக்குப்பதில், மான் இருந்திருந்தால் எவ்வளவு அழகாகவும் பொருத்தமாகவும் இருக்கும்? கோர வாயைத் திறந்து, தீக் கொழுந்து விடும் கண்களால் பார்க்கும் புலியின் சிலை இங்கு இருக்கிறது என்றுல் இதன் பொருள் என்ன? ஒரு படைத் தலைவன் வீட்டில் இது இருந்தால் அது அவனது வீரத்துக்கு எடுத்து காட்டு எனலாம்! இந்தப் பாகு மொழியாளின் வீட்டிலிருக்கிறதே—இவளும் புலியைப் போலக் கொடுமையும் இரதத வெறியும் கொண்டவள் என்பதைக் காட்டுவதற்காகவா?

இவ்வாறு எண்ணியவனுய், அமர்ந்திருந்த ஆசனத்தை விட்டெழுந்து, அந்தப் புலியின் அருகே சென்றுன. அதன் பற்களை அவன் பிடித்து ஆட்டிய பொழுது, வாயிற் படியிலிருந்த பட்டுத்திரையை விலக்கிக்கொண்டு பணிப் பெண் உள்ளே வந்தாள்.

"அம்மா தங்களை மேலே அழைக்கிருர்கள்!"

'மேலே அழைக்கிருர்கள்!' என்று தனக்குத்தானே அவன் முணுமுணுத்துக்கொண்டான் சோலையப்பன் என்ற பெயரைக் கேட்டதும் அந்த சேல் விழியாள் ஓடோடியும் வந்து, "வருக! வருக! தங்கள் வருகையால் என் பெண் மனம் பூரிக்கிறது! கூத்தாடுகிறது!" என்றெல்லாம் அதரத்தில் புன்னகையோடும்

ஆசை பொங்கும் குரலோடும் கூறுவாள் என அவன் எதிர்பார்த்தான். வலிய வலிய அவள் அழைத்த போதெல்லாம் வராத நான் இப்பொழுது எதிர்பாராத விதமாக வந்திருப்பது கண்டு இன்ப நடனம் செய்வாள் என்று நம்பியிருந்த எனக்கு, "மேலே அழைக்கிறுர்கள்!' என்று வேலைக்காரி சொன்னது, அவமதிப்பாகவே தோன்றியது.

"சரி!" என்று பெரு மூச்சுவிட்டபடி கூறி, பணிப் பெண்ணைப் பின் தொடர்ந்தான்.

உப்பரிகையை அடைந்ததும், "வணக்கம்! வாருங்கள்!" என்று குறுநகையோடு அவனைச் செந்தாமரை வரவேற்று, உட்காரும்படி ஓர் ஆசனத்தைக் காட்டினுள்.

இதென்ன இவ்வளவு களைத்திருக்கிறீர்? எங்கேயாகிலும் வெளியூருக்குப் போய்விட்டு வருகிறீரா?" என்று கேட்டபடி, அவனுக்கு எதிரிலிருந்த ஆசனத்தில் அவள் அமர்ந்தாள்.

"ஆமாம் செந்தாமரை! திருநெல்வேலியில் என் மாமா உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறுர்–அவரைப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று அவளது நீண்ட விழிகளைப் பார்த்தபடி, ஒரு பொய்யை விட்டெறிந்தான்.

"திருநெல்வேலியில் தங்கள் மாமா இருக்கிறுரா?"

"ஆமாம் பெயர் சடையப்பர்! நேராகத திருநெல்வேலியில் இருந்துதான் வந்து கொண்டிருக்கிறேன்–இன்னும் வீட்டிற்குக் கூடப் போகவில்லை! இரவெல்லாம் பிரயாணம் செய்து வந்தேனு, அப்பொழுது ஏனு உன் நினைவு அடிக்கடி எனக்கு வந்துகொண்டிருந்தது! சரி முதலில் செந்தாமரையைப் பார்த்துவிட்டுப் பிறகு மற்றவர்களைப் பார்க்கலாம் என்ற எண்ணத்தோடு நேரே உன் இல்லத்துக்கு வந்தேன்! உதட்டின் கோடியில் குறும்புப் புன்னகையோடு கூறியபடி அந்த உல்லாசியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

"அப்படியா?" என்று உப்புச்சப்பற்ற குரலிலே அவள் கேட்டது அவனுக்கு ஏமாற்றத்தையே தந்தது.

"செந்தாமரை! உன் வீடுஅரண்மனைபோல, இவ்வளவு பெரியதாகவும் இருக்குமென்று, நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை!"

"ஆமாம், ஒரு நடன மாது என்ற அலட்சியம் தங்களுக்கு!!'

"ஆமாம், அந்த அலட்சியம் ஆரம்பத்தில் இருந்தது என்னவோ உண்மைதான்! மயானத்தில் அன்றிரவு கண்டேனே, அது முதலே ஏதோ ஒரு சக்தி, என் நினைப்பை அடிக்கடி உன் அழகு நிலா முகத்தைச் சுற்றிச் சுற்றி வரும்படிச் செய்கிறது! உன் மதுரமான பேச்சு, காதில் தேனைப் பாய்ச்சியபடி இருக்கிறது......"

"ஆமாம், அஞ்சலையின் வீட்டிற்குத் தாங்கள் சென்றீர்கள் அல்லவா?"

பேச்சை வேறு திசையில் மாற்றவே, அவள் அஞ்சலையைப்பற்றி விசாரிக்கிருள் என்பதை அவன் புரிந்து கொண்டு, "ஆமாம்!" என்றுன்.

"பாவம், அண்ணனை இழந்த கவலை, வாழ்க்கையின்மீதே அவளுக்கு வெறுப்பை உண்டாக்கிவிட்டிருக்கும்!"

"நல்ல மனம் படைத்தவர் அனைவருக்கும் அப்படித்தான் எண்ணத் தோன்றும்! ஆனல் அண்ணனே அரசியல் ஆத்திரக்காரன் என்றுல், தங்கையோ அர்த்த ராத்திரி அவசரக்காரியாக இருக்கிருள்! அந்தக் காமாந்தகாரியின் பேச்சை எடுக்காதே, எனக்குக் கடுங்கோபம் வருகிறது!...,செந்தாமரை! குளிர்த் தென்றல் போன்ற உன் பார்வையும், இன்பகீதம் போன்ற உன் பேச்சும்..."

பேச்சை இடையிலே நிறுத்த வேண்டியதாயிற்று. பணிப்பெண் அங்கு வந்ததால். பாலும், பலகாரமும் கொண்டுவந்து வைத்துவிட்டு அவள் வெளியே சென்றுள்.

"நேர்மை கொண்ட அறிஞனுடைய நட்பை விரும்பி அடைய வேண்டும்! கெட்டிக்காரனுன தந்திரசாலியிடம் எச்சரிக்கையோடு இருக்கவேண்டும்! நேர்மையான முட்டாளிடம் இரக்கம் கொள்ளவேண்டும்! தந்திரசாலியான முட்டாளைத் தூரத்தில் விலக்கியே வைக்கவேண்டும்! — ஏதோ ஒரு பழைய கதையில் படித்த மணிமொழி இது! கெட்டிக்காரனுன தந்திரசாலிக் இந்த சோலையப்பன்! இவரிடம் எச்சரிக்கையோடே நடந்து கொள்ளவேண்டும்!" என்று செந்தாமரை எண்ணியவளாய், எதிரே இருந்த பலகாரத்தைக் காட்டி, 'சாப்பிடுங்கள்!" என்றுள்.

"உன்னைப் பார்த்தாலே போதுமே, பசி வேறு எடுக்குமா?"

"வயிற்றுப் பசியை முகம் கூறுகிறது—சாப்பிடுங்கள்! சாப்பிட்டு விட்டு, கொஞ்சநேரம் இளைப்பாறுங்கள் — பிறகு பேசலாம்!" என்று அவள் குத்தலாகக் கூறியதும், மேலும் எப்படிப் பேசுவது என்பது புரியாமல் அவன் சாப்பிட ஆரம்பித்தான்.

பாலைக்குடித்து அவன் வாயைத் துடைத்ததும், அடுத்திருந்த கட்டிலை அவள் காட்டினுள்.

"நீ ஒரு பண்ணிசைத்தால், நான் அப்படியே தூங்கிவிடுவேன்!" என்று அவன் சொன்னதும், கட்டிலுக்கு அருகில் இருந்த ஆசனத்தில் அமர்ந்து அவள் பாட ஆரம்பித்தாள். பிரயாணத்தால் களைத்திருந்தவன், அந்த் தாலாட்டிலே தன்னை மறந்து தூங்கிவிட்டான்.

அவன் கண்விழித்தபோது, செந்தாமரை அவசரமாக ஓலை எழுதிக் கொண்டிருந்ததைக் கண்டான். உடனே அவன் கண்களை மூடிக் கொண்டான்.

"இவ்வளவு அவசரமாக யாருக்கு ஓலை தயாரிக்கிறுள்? ஒருவேளை, தூமகேதுவிற்கு நான் இங்கு வந்திருப்பதை அறிவிக்கிருளா? ஆமாம், ஓலை நிச்சயமாகத் தூமகேதுவிற்குத்தான் இருக்கும்! இவளைக கையும் களவுமாகப் பிடித்துவிட நல்ல வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது! இவளது கவர்ச்சிகரமான முகத்தைப் பார்க்கும்போது இவளா நச்சுக்கனி என்ற சந்தேகம்கொள்ளாதவரே இருக்க முடியாது! இவள் நச்சுக கனிதான — உயிர் குடிக்கும் நல்லபாம்புதான் என்பதை இப்பொழுது இந்த ஓலை காட்டப்போகிறது. இந்த ஒய்யாரியின் உண்மை உருவத்தைக் காட்டப் போகிறது!"

இப்படி நினைத்து அவன் திரும்பவும் மெள்ளக் கண்களைத் திறந்தான். அவன் விழித்துக்கொண்டான் என்பதைக் கண்டதும், அவள் ஆசனத்தை விட்டு அவசர அவசரமாக எழுந்தாள். எழுதிக் கொண்டிருந்த அந்த ஓலையைச் சேலையின் தலைப்பில் மறைத்துக் கொண்டு, மெள்ள அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். ஒரு பக்கமாக இருந்த மரப்பெட்டியைத் திறந்து, அதனுள் அந்த ஓலையை வைத்து மூடினுள்.

"வஞ்சகியே, அகப்பட்டுக் கொண்டாயா? கள்ளியே, உன் கபடநடத்தை இப்பொழுது அம்பலமாகிவிட்டது!" என்று ஆத்திரத்தோடு கூறியபடி, கட்டிலை விட்டு அவன் துள்ளிக் குதித்து, பெட்டியை மூடிய கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்!

[வளரும்]

முகப்பில் :

ஹோ-சி-மின்

'பா', 'நிகுயன் - அய் - குவாக்', "சோங் - மோன் - சோ", "டான் தான்" என்ற பல பெயர்களில் உலகின் அநேக நாடுகளில் வாழ்ந்திருக்கிற ஹோ - சி - மின் இந்த இதழின் முகப்பை அலங்கரிக்கிறார். அவருக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், ஜப்பான், சீனம், போர்ச்சுகீஸ் ஆகிய ஏழுமொழிகளில் நல்ல அனுபவம் உண்டு.

ஏழைக் குடியானவ வகுப்பில் பிறந்து தனது 19-வது வயதில் தாய், தந்தை, தனயன், தமக்கை ஆகியோர் பிரெஞ்சு ஏகாதிபத்திய அதிகாரிகளால் சிறை பிடிக்கப்பட்டுப் போவதைப் பார்த்தது முதல் 'ஹோ'வை அரசியல் உலகம் இழுத்துக்கொண்டது. பிரெஞ்சுத் தளையிலிருந்து இந்தோ - சீனத்தை விடுவிப்பதற்காக உள்ளத்தின் உறுதி ஒன்றை மட்டும் சுமந்து கொண்டு நாடுகள் பல சுற்றியவர் இவர்.

அந்த நாட்களில் அவர் பார்த்தது சமையல்காரன் வேலையிலிருந்து பத்திரிகை ஆசிரியர் வேலை வரை. விடுதலைப் போராட்டத்துக்காக சீனாவின் ஆதரவைப் பெற வேண்டி இந்தோ சீனத்திலிருந்து இராணுவக் கண்காணிப்பைத் தாண்டி, நடந்தேபயணம் புறப்பட்ட போதுதான் ஹோசிமின் என்ற பெயரை மேற்கொண்டார். கடைசியில் இராணுவத்தினரிடம் சிக்கி கைகால் விலங்குகளிட்டு 80 நாட்கள் காடுகளிலும் மலைகளிலும் நடத்தியே அவரை இழுத்துச் சென்று பல ஆண்டு சிறைவாசம் தந்தனர்.

1945 - செப்டம்பர் மாதம் 2-ந் தேதி 'எனது அருமைக் குழந்தைகளே' என்று இலட்சக்கணக்கான மக்கள் முன் சுதந்திரப் பிரகடனத்தைப் படித்த 'ஹோ' பின்னர் தோன்றிய அரசியல் நிலைமைகளால் இன்று ஹனாயைத் தலைநகராகக் கொண்ட வடக்கு வியட்நாமின் ஒரே தலைவராகத் திகழ்கிறார்.

சீனாவின் அருகில் இருந்து கொண்டு இரஷ்யாவின் நட்பினையும் தொடர்ந்து கடைப்பிடித்து நீண்ட நெடுங்காலமாகப் பதவி வகித்துவரும் இவரது அரசியல் தந்திரம் அமெரிக்கர்களையும் திகைக்க வைக்கிறது.

கண்மூடித்தனமான பின்பற்றுதல் என்றாலும் 'ஹோ'வுக்கு மக்களிடையே செல்வாக்கு அதிகம். ஒரு சமயம் அவரது சட்டை ஒன்று 4,67,000 இந்தோ சீன நாணயத்துக்கும், படம்ஒன்று 1,30,000 நாணயத்துக்கும் விலைபோனது!

மணவாழ்க்கை மேற்கொள்ளாத இந்த ஆயுள் பிரம்மச்சாரிக்கு குழந்தைகளிடம் சிறப்பான பெயராம். 'நீ சாப்பிடவில்லை யென்றால் 'ஹோ' மாமா கோபித்துக் கொள்வார்" என்று தாய் சொன்னால் போதுமாம்! உடன் வட்டிலை வெறுமையாக்கிவிட்டுநான்சாப்பிட்டுவிட்டேன் என்று ஹோமாமாவிடம் சொல்லிவிடம்மா":என்னுமாம்குழந்தை!

அரை நூற்றாண்டுகளுக்குமேல் தென்கிழக்கு ஆசியாவில் சரித்திரம் சமைத்துக்கொண்டிருக்கும் 'ஹோ' உலகத் தலைவர்கள் வரிசையில் ஒருவர். ❁

10-ம் பக்கத் தொடர்ச்சி

சாலிஈட்டன் ஆகப்போவதுஉறுதி; வெள்ளைமாளிகையின் ஆரணங்கு ஆகப் போகும் நாள் விரைவில் என்று எண்ணி அகமகிழ்ச்சியுடன் இருந்து வந்த சாலி வாட்சன் தற்செயலாக, ஈட்டன் நடத்தும் சதியைக் கண்டறிகிறாள்.

உனக்காகத்தான் இவ்வளவும் என்று சாலி கூறிய போது உன்னோடு சேர்ந்துதான் வெள்ளை மாளிகைக்குச் செல்லப்போகிறேன் என்று பசப்பிய ஈட்டன், திருநாள் உறுதி என்று தெரிந்தும், எங்கோ நெடுந்தொலைவில் இருந்து வந்த தன் மனைவிக்கு அழைப்பு அனுப்புகிறான்; நான் குடிஅரசுத் தலைவராகப் போகிறேன்; வெள்ளை மாளிகை உன்னை அழைக்கிறது; உடனே வந்திடுக! என்று அவளும் வந்து சேருவதாகச் சேதி அனுப்புகிறாள்.

இது தெரிந்ததும் சாலிசீறுகிறாள்; ஈட்டன் தன்னை ஏமாற்றுவது அறிந்து பதறுகிறாள்.

டில்மன் மீது தொடுக்கப்பட்ட வழக்கிலே நெருக்கடியான கட்டம்!

அதே நேரத்தில், சாலி — ஈட்டன் தொடர்பிலே நெருக்கடி!

ஆத்திரம் பீறிட்டுக் கொண்டுவந்த நிலையில், சாலி வாட்சன், தன் தவறு பற்றியும், டில்மன் மாசற்றவன் என்பது குறித்தும், குற்றச்சாட்டு பொய்—இட்டுக் கட்டப்பட்டது என்பது பற்றியும்—தன் தகப்பனாரிடம் ஒப்புக்கொள்கிறாள். அவளுடைய வாக்கு மூலம், சட்ட முறைப்படி தயாரிக்கப்படுகிறது அதை எடுத்துக் கொண்டு போகிறார் வாட்சன்; தனது மன்னிப்பைத் தெரிவித்துக் கொள்கிறார் டில்மனிடம்.

"வீணான பழி சுமத்தினார்கள் என்பதை உணருகிறேன். இதோ என் மகள் தந்த வாக்குமூலம். இதனைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்று கூறி செனட்டர் வாட்சன் தன் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

அதனைக் காட்டிலும் மேலான பெருங்குணம் தமக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் டில்மன் அந்த வாக்குமூலத்தை வாட்சனிடமே கொடுத்துவிட்டு உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்களே அதுபோதும் எனக்கு என்று கூறுகிறார்.

ஆனால் வாட்சன்! இந்த ஒரு விஷயம், வீண்பழி என்பதாலேயே, நான் உமது பக்கம் இருப்பேன் வழக்கிலே என்று எண்ணிக்கொள்ளாதீர். வழக்கு விவரம் முழுவதும் அறிந்து, நேர்மையின் பக்கம்தான் நிற்பேன். என் மகள் பழி சுமத்தினாளே என்ற பரிதாபத்துக்காக உம்பக்கம் நிற்பேன் என்று நம்பிவிடாதீர்கள் என்று அந்த முதியவர் கூறுகிறார். நேர்மையின் பககம் நின்றிடுவதை நான் வரவேற்கிறேன் என்று ஒப்பம் அளிக்கிறார் டிலமன்.

இப்படி சித்திரவதை செய்வதைவிட, டில்மனை வெள்ளை வெறியர்கள் ஒரே அடியாகக் கொன்று போட்டுவிட்டிருக்கலாமே என்று கேட்கத் தோன்றும்.

ஆபிரகாம் லிங்கனைக் கொன்றுவிடவில்லையா! கென்னடியைச் சுட்டுக் கொன்றுவிடவிலலையா! டில்மன் மீது மட்டும் கொலைகாரர்கள் பாயாமலா இருந்திருப்பார்கள். பாய்ந்தனர்! தப்பித்துக்கொண்டார். அந்தக் கொலை முயற்சியையொட்டியும் ஒரு உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி இருக்கிறது. அடுத்த கிழமை அதுபற்றிக் கூறுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

காமராஜரின் சூருவளிச் சுற்றுப்பயணப் பேச்சினைப் பார்க்கும்போது விளக்கமாகத் தெரிகிறது. எங்கும் ஒரேபேச்சு! எப்போதும் ஒரேபேச்சு! எல்லாப் பேச்சும், கழகத்தைப் பற்றியே!!

எங்கோ கொண்டுபோய் உட்காரவைத்திருக்கிருர்கள் பெரியவரை! ஆனல் அவருடைய நினைப்போ கழகத்தைப் பற்றியேதான்!!

அவருடைய கவனத்தை அந்த அளவுக்கு ஈர்த்திடத்தக்க நிலையில் கழகம் இருக்கிறது.

வியட்நாம் பிரச்சினை கிடக்கட்டும் ஒருபுறம்; கஞ குழப்பம்பற்றி மற்றவர் எவரேனும் கவனித்துக்கொள்ளட்டும், ரூபாயின் மதிப்பு எவ்வளவு தேய்நதுவிட்டது என்பதுபற்றி வேறு யாரேனும் அறிந்து கூறட்டும, நான் ஒரே ஒரு வேலையைத்தான் கவனிததாகவேண்டி இருக்கிறது; என் நேரத்திலே மிகப் பெரும்பகுதியைச் செலவிட்டால்தான் அந்த வேலையைக் கவனிக்க முடியும் என்று நிலை ஆகிவிட்டது......கழகம்!......கழகம்! என்று, பாவம் அலறுகிருர், அரற்றுகிருர், ஆயாசப்படுகிருர், அலைகிருர்!!

அதிலும் சட்டமன்றத்தில் நமது தோழர்கள், வேறுசில இடங்களிலே நடைபெறுவதுபோன்ற அமளிகளிலே ஈடுபடாமல், நிதானமாகவும் முறையாகவும், ஆர்ப்பரிப்பற்ற ஆர்வத்துடனும்! அச்சமற்ற ஆனல் வரைமுறைக்கு உட்பட்ட கண்டனம் வீசியும் வருகிருர்களே, அது அவருக்கு, 'எதிர்காலம்' எபபடியெப்படி வடிவமெடுததுவிடுமோ என்ற அச்சத்தையே மூட்டிவிட்டிருக்கிறது.

அதனுல்தான் அவர் ஊருருக்கும் விரைந்து சென்று, "பயப்படாதீர்கள்! பயம்வேண்டாம்! கழகத்தைக்கண்டு கலங்கவேண்டாம்! கழகம் பிறகட்சிகளுடன் 'கூட்டு' சேருவதுபற்றிப் பயப்படாதீர்கள்! அப்படி பல கட்சிகள் கூட்டுச்சேருவது நமக்குத்தான் நல்லது!" என்று பேசிவருகிருர்.

பயம் கூடாது! பயம் கூடாது என்று, உள்ளபடி பயத்தால் பீடிக்கப்பட்டவர்கள்தான் அலறுவார்கள் என்று அந்த ''அகில இந்தியா''தான் திருவாய்மொழி பொழிந்திடக் கேட்டோம், மொரார்ஜியைக் கேலிசெய்தபோது.

இப்போது அதே 'அகில இந்தியா'தான் "பயப்படாதீர்கள், பயப்படாதீர்கள்'' என்று சொற்பெருக்கு ஆற்றிவரக் காண்கின்ருேம்.

வாண்டையாரே! பயப்படாதீர்! வல்லக்கோட்டையாரே! பயப்படாதீர்! பையூராரே! பயப்படாதீர்! பவுனுராரே! பயப்படாதீர்! எனறு பேசிப் பேசித் தமக்கு ஏற்பட்டுள்ள பயத்தைக் காட்டிக்கொள்கிருர்.

அவர் மேற்கொள்ளும் சுற்றுப்பயணம், கழக வளர்ச்சியின் அளவினை நாமே உணர்ந்துகொள்ளச் செய்திட உதவுகிறது.

வஙகக் கலகம், பாஞ்சாலத்தில் பயங்கரம்! டில்லியில் அமளி! மிஜோ கலகம்! — ஏதேதோ நடந்திடுகிறது; ஆனல் அவரோ, பயப்படாதீர்! பயப்படாதீர்! கழகத்தைக கண்டு பயப்படாதீர்!! என்று தைரியம் அளிததிட பவனிவருகிருர்!

இந்தநிலை, கழகத் தோழர்களுக்கு மேலும் உற்சாகத்தை ஊட்டிடவும், எழுச்சி பெற்றிடவும துணை செய்கிறது.

நாட்டுமக்களும், கழகத் தோழர்களின் சட்டசபைப் பணிபற்றியும், வெளியே விளக்கமளித்திடும் பிரசாரப் பணியாற்றுகிருர்களே அதுபற்றியும், நன்றி கலந்த மகிழச்சி பெறுகின்றனர்.

"எப்படி வேலைவாங்குகிறது பார்த்தாயா கழகம்; காமராஜரை! என்று முதியவர்கள் முறுவலுடன் பேசுகின்றனர்.

எமது கழகத்தைச்சமாளிக்க அவர் தமது 'அகில இந்திய' வேலையையும் ஒதுக்கிவைத்துவிட்டு, ஓடோடி வருகிருர், ஊரூரும் அலைகிருர், அஞ்சிக்கிடப்பவர்களை அருகே அழைத்து முகத்தைத் துடைத்துவிடுகிருர், முதுகைத் தட்டிக்கொடுக்கிருர், 'மூட்டைகளை—பண மூட்டைகளைத் தயாராக வைத்திடுங்கள்! ஒரு கை பார்த்துவிடலாம் கழகத்தை' என்று பேசிவருகிருர்! கழகத்தைப்பற்றிய நினைப்பு அவரைக் குடைந்தபடி இருக்கிறது!! என்று கழக இளைஞர்கள் பெருமிதத்துடன் பேசிக்கொள்கின்றனர்.

இருபது இலட்சங்கள் திரட்டியாகிவிட்டது, தேர்தல் நிதியாக; ஆனல் கணக்குப்பார்க்கிருர் காமராஜர்; போதாது என்று புரிகிறது; ஆகவே மேலும் ஒரு பதது இலட்சம் திரட்டித் தந்தாகவேண்டும் என்று தெரிவிக்கிருர்.

இன்னும் ஒரு நாலு 'ஊசி' போடவேண்டும் என்று கூறுகிருரல்லவா திகைத்தபடி, மருத்துவர், அது போன்ற நிலையைத்தான் இது நினைவிற்குக் கொண்டு வருகிறது.

பிளந்துபோன சுவற்றுக்கு எத்தனை முறை சேறு கூட்டி அப்பி என்னபயன்? நைந்துபோன ஆடைக்கு எத்தனை முறைதான் 'ஒட்டுப்போடமுடியும். ஓட்டைப் பாண்டத்தில் எத்தனை இடங்களில்தான் துணியைச் சுற்றி அடைத்துவைப்பது!

எதையாவது செய்தாகவேண்டுமே! செய்கிருர்!! இழிமொழியை உமிழ்கிருர்; இலட்சங்களைக் குவிக்கிருர். ஆனல் மக்கள் கொண்டுள்ள கொதிப்பினையும் கசப்புணர்ச்சியையும் பார்க்கும்போது, காமராஜர் திரட்டும் இத்தனைப் பெரிய தொகையும் பத்துப் பதினைந்து தொகுதிகளுக்கே காணுதுபோலத்தான் தெரிகிறது.

"இன்னும் ஓர் பத்து இலட்சம் திரட்டுகிருர்களாமே, காங்கிரசார்!"

"ஆமாம்! ஏன் திரட்டமாட்டார்கள்! அதிகாரம் இருக்கிறது, அதனுல் ஆள் அம்பு கிடைக்கிறது; அரித்து எடுக்கிருர்கள்"

"ஏன் இவ்வளவு பணம்? பெரிய தொகை?"

"எதிர்ப்பைச் சமாளிக்கத்தான். கழகத்தார் சும்மாவா இருக்கிருர்கள்; குடைந்தெடுக்கிருர்களே. தெரியுமல்லவா, சட்டசபையிலே கழகத்தார் பேசியிருப்பது."

"என்ன பேசிஞர்கள்...எதைப் பற்றிப் பேசிஞர்கள்..."

"சொல்லவே வெட்கமாக இருக்கிறது. கூட்டுறவுத் துறையிலே......"

இப்படியல்லவா உரையாடல், ஊரெங்கும்! சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் அல்லவா, அன்பில் சட்டசபையில் பேசியதுபற்றி விவரிததுக் கூறுவர்!

இந்த நிலைமை, மக்கள் மனதிலே எவ்வளவு அருவெறுப்பை மூட்டிவிடும்; அதை அடக்க, முப்பது இலட்சமும் போதாது, மூன்று கோடியுமபோதாது!! கொச்சையாகக் கூறுவதுண்டு: கடப்பாரையை விழுங்கிவிட்டு சுக்குக் கஷாயம் சாப்பிடுவதுபோல என்று. அது இது. காமராஜர், "கொண்டு வா இன்னும் ஒரு பத்து இலட்சம்" என்று கேட்பது.

கேள்வி ? பதில்

(1) மொரார்ஜி, பிரதம மந்திரிக்கு அடுத்தபடியான அந்தஸ்த்து தமக்குத் தரப்படவேண்டும் என்று போராடினாரே என்ன ஆயிற்று?

சமரசம் ஏற்பட்டுவிட்டது! மொரார்ஜிக்கு ஒன்பதாவது இடம் கிடைத்திருக்கிறது!!

(2) சர்க்காரின் நிர்வாகச் செலவிலே சிக்கனம் வேண்டும் என்று வற்புறுத்துகிறீர்களே, சாத்தியமா?

சாத்தியம் என்பதிலே யாருக்கும் சந்தேகம் இல்லை. திட்டமிட்டு சிக்கனம் கையாண்டால் ஆண்டொன்றுக்கு, மத்திய — மாநில சர்க்கார்களின் செலவுத் தொகையில் 700 கோடி ரூபாய் மிச்சம் பிடிக்கலாம் என்கிறார்கள் விவரம் தெரிந்தவர்கள்; வெட்டிப் பேச்சுக்காரர்கள் அல்ல; நிபுணர்கள்.

(3) இந்தியப் பேரரசு அமைத்துள்ள உணவு கார்ப்பரேஷன் எவ்வளவு உணவுப் பொருள் வாங்கப் போகிறது?

1966—67ம் ஆண்டில் 250 - கோடி ரூபாய் பெறுமானமுள்ள உணவுப் பொருள் வாங்கத் திட்டமிட்டிருக்கிறது.

(4) காங்கிரஸ் சர்க்காரின் நிர்வாக ஊழல் குறித்து கழகம் கண்டிக்கிறது; கார்ப்பரேஷனில் கழகம் நடத்தும் நிர்வாகத்தைக் காங்கிரசார் கண்டிக்கிறார்களே, அது பற்றி என்ன கருதுகிறீர்?

ஒரு கதைதான் கவனத்திற்கு வருகிறது. ஏண்டா! உன் வாய் இந்த நாற்றம் நாறுகிறது என்று கேட்டானாம் ஒருவன்; அதற்கு தகுந்த சமாதானம் கூற முடியாமல் திணறியவன் சொன்னானாம். அன்றொரு நாள் உன் கையிலே 'பினாயில்' நாற்றம் அடித்ததே தெரியாதா என்று!! கார்ப்பரேஷனில், கழகம் நடத்திவரும் நிர்வாகம், காங்கிரஸ் சர்க்காரின் கட்டு திட்டத்துக்கு உட்பட்டது. அழுக்கைப் போக்க கழகம் 'பினாயில்' தெளிக்கிறது. வாய் நாற்றமும் அதுவும் ஒன்றாகுமா! குடிவெறியால் ஆடுபவனைப் பார்த்து "அடப்பாவி மகனே! குடித்துவிட்டு ஆடுகிறாயே, ஆடலாமா?" என்று கண்டிக்கும்போது, "போடா போ! நான் மட்டுந்தானா ஆடுகிறேன்? நீ ஆடவில்லையா அன்றொரு நாள்–ஊஞ்சலில் உட்கார்ந்துகொண்டு" என்று கேட்டானாம். அந்தக் கதைபோல இருக்கிறது அவர்கள் கழகத்தைக் கண்டிப்பது.

(5) காங்கிரஸ் கட்சி, சாமான்யர்களிடமிருந்துதான் தேர்தல் நிதி திரட்டியிருப்பதாக முதலமைச்சர் பக்தவத்சலம் பேசியிருக்கிறாரே கவனித்தீர்களா?

ஓ! வேடிக்கையாக இருந்தது அவர் பேச்சு. அவருடைய காங்கிரஸ் கட்சியே முன்பு ஒரு தகவல் வெளியிட்டிருந்ததை அவர் மறந்துவிட்டாரே என்பதுமேலும் வேடிக்கையாக இருக்கிறது. பெரிய கம்பெனிகளிடமிருந்து சென்ற பொதுத்தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி திரட்டிய நன்கொடை 98 இலட்சம்! சாமான்யமான தொகையா?

(6) காங்கிரசின் பெருந் தலைவர்கள் எதிர்க் கட்சிகளைப்பற்றிப் பேசும் போது அரசியல் பெருந்தன்மையே காணோமே, ஏன்?

அவர்கள் பெரிய இடத்திலே உள்ள தலைவர்களே தவிர 'பெருந் தலைவர்கள்' ஆகவில்லை என்பதால்தான்! நிலை உயர உயர, பெருந்தன்மை வளர வேண்டும்; வளரவில்லையென்றால், இடம் உயர்வு இயல்பு அவ்விதம் இல்லை என்றுதான் சான்றோர் கருதிக்கொள்வர்.

(7) பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் அமெரிக்கா சென்றதும் முதல் கேள்வி என்ன கேட்பார்கள், என்று எதிர்பார்க்கிறீர்கள்?

தாங்கள் ஆட்சி செய்ய ஆரம்பித்ததிலிருந்து இதுவரையில் எத்தனை பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள் என்ற கேள்வியைக் கேட்கக்கூடும்.

(8) இங்கிலாந்தில் திடீரென்று ஏன் பொதுத் தேர்தலை வைத்துக் கொண்டார்கள்? ஆளுங்கட்சியிலே நெருக்கடியா?

அப்படியொன்றும் இல்லை. ஆனால் அந்த ஜனநாயக நாட்டில் மக்களின் ஆதரவு தெளிவாகத் தமக்கு இருக்கிறதா என்று விளக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஜனநாயக உணர்வு அரசியல் கட்சிகளுக்கு இருக்கிறது. இப்போதைய பிரதமர் வில்சன் இப்படியே ஆட்சி நடத்திக்கொண்டுகூடப் போகலாம். ஆனால் பதவியிலே ஒட்டிக் கொண்டுவிட்டால், எவ்வளவு பிடித்து இழுத்தாலும் வெளியே வரமாட்டார் என்ற கெட்டபெயர் தனக்கோ தன் கட்சிக்கோ வரக்கூடாது என்பதற்காக, அவராகவே, மறுபடியும் மக்களிடம் சென்று, தொடர்ந்து ஆட்சி செய்ய அனுமதி தருகிறீர்களா என்று கேட்கிறார். அது ஜனநாயகப் பண்பு.

(9) 'கணக்கில் வராத பணம்' என்கிறார்களே, என்ன அதன் பொருள்?

சொல்லாமல் எடுத்துக் கொண்ட பொருள் என்றால் என்ன அர்த்தம்? அதேதான், இது!

(10) கழகத்துடன் எந்த விதமான தொடர்பும் கொள்ளாதவர்கள் கழகத் தலைவர்களைப் பற்றி மனம்போன போக்கில் 'விமரிசனம்' செய்கிறார்களே, அதைப் பற்றி என்ன கருதுகிறீர்?

என்ன கருதுவது! செவிட்டுச் சுப்புவிடம் போய் யாராவது கேட்பார்களா, நேற்றைய கச்சேரியில் என்னென்ன 'இராகம்' பாடினார்கள் என்று. அவனுக்குச் சொன்னால், சிரிக்கமாட்டார்களா? ஆனால் சிலருக்கு விசித்திரமான சுபாவம்; விருந்து சாப்பிட்டவன்கூடக் காட்டாத அளவு அக்கறை. வீசி எறியப்பட்டதைக் கொண்டே, விருந்தின் அருமையைப்பற்றி வெளியே இருந்தே தெரிந்துகொள்பவர் இல்லையா. அவர்களைப்பற்றி ஏயலலாம என்ன இருக்கிறது கூறுத!

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.